விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 14 சனிக்கிழமை (28.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 099

# யாழ்ப்பாணம் மாற்றமடைந்தால் நாடு மாற்றமடையும் - ரணில்



(யாழ்ப்பாணம்)

பொதுத் தேர்தலின் பின்னர் வடக்கை ஒரு பொருளாதார வலயமாக மாற்றுவதற்காக செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும். அதற்கான நிதியை பெற்றுத்தரமுடியும். யாழ்ப்பாணம் மாற்றமடைந்தால் நாடு மாற்றமடையும் என்று பிரதமர் ரணில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர், நேற்றையதினம் யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் உயர்பாது 24 ஆம் பக்கம் பார்க்க....

## முதல்வரை புறக்கணித்த ரணில்; ரணிலை புறக்கணித்த சிறிதரன்

(கிளிநொச்சி)

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வடக்கு மாகாண முதலமைச்சரினை புறந்தள்ளும் நிகழ்வுகளில் நாம் கலந்து கொள்ள முடியாது என தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தமிழ் மக்களின் தேசிய ஒற்றுமையை சிதைக்கும் ரணிலின் திட்டத்தில் தான் பங்கெடுக்க மாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் செய்யும் நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்காது புறக்கணித்துள்ளார். இது தொடர்பாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் பா.உறுப்பினர் சி.சிறிதரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம்செய்யும் நிலையில் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு அழைப்பு விடாது ஏனைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பா.உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளமையானது தமிழ் மக்களின் தேசிய ஒற்றுமையை-பலத்தை சிதறடிப்பதன் வடிவமே.

எனவே வடக்கு மாகாண முலமைச்சரை புறக்கணித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க் பங்கு பற்றும் நிகழ்வுகளை நானும் புறக்கணிக்கின்றேன்.

வடக்குக் கிழக்கிலும் மலையகத்திலும் 24 ஆம் பக்கம் பார்க்க....

## ரணில் - விக்கி நிழல் யுத்தம் ; எம்பிகள் சிலர் கலந்து சிறப்பிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில்பிரதமர்ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளும் நிகழ்வுகளுக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு அனுமதி 24 ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரி ஆட்சி தொடர்ந்தால் தமிழர் பிரச்சினை தீரும்

### இரா.சம்பந்தன் நம்பிக்கை

(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தொடர்ந்து 10 வருடம் செயற்பட்டால் வடக்கு- கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்குமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜனாதிபதி குறித்து வடக்கு கிழக்கு மக்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். 24 ஆம் பக்கம் பார்க்க....

## இன்னும் 20 வருடங்களாவது இந்த ஆட்சி நீடிக்க வேண்டும்

### சந்திரிகா விருப்பம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் இதே போன்று இன்னும் 20 வருடங்கள் நீடிக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில். கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து தற்பொழுது செயற்பட்டு வருகின்றன. இதன்போது ஒரு கட்சிக்கு தேவையானதை அந்த கட்சியோ அல்லது மற்ற கட்சிக்கு தேவையானதை அந்த கட்சியோ மாற்றியமைக்க முடியாது.


குறைந்த பட்சம் 20 வருடங்களாவது தற் 24 ஆம் பக்கம் பார்க்க....

## ரணிலுக்கு யானைப் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் யாழ்.வருகையின் போது வழங்கப்படாத பாதுகாப்பிலும் பார்க்க பிரதமர் ரணிலுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு பன்மடங்கு அதிகரித்து காணப்பட்டது.

வடக்கிற்கு 3 நாள் விஜயத்தினை மேற்கொண்டு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த பிரதமர் ரணில் யாழில் நேற்றைய தினம் பல நிகழ்வுகளில் கலந்து கொண்டி 24 ஆம் பக்கம் பார்க்க....




மூன்று நாள் விஜயமாக வடக்கிற்கு வந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றையதினம் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளையும் மற்றும் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரையும் யாழ்ப்பாணத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உலகத் தலைவர்களை சந்திக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

உலகத் தலைவர்கள் மற்றும் உலக வர்த்தக சமூகத்தினரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று சந்திக்கவுள்ளார்.

ஆசியாவின் புதிய எதிர்காலம் மற்றும் பொது தலையெழுத்தைக் கொண்ட சமூகம் என்ற தொனிப்பொருளில் சீனாவின் ஹயினேன் பிராந்தியத்தில் ஆரம்பமாகவுள்ள மாநாட்டில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார்.

சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கின் அழைப்பின் பிரகாரம் சீனாவிற்கான உத்தியோகப்பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந் நாட்டின் அனைத்து முக்கிய தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்பட சீனா காட்டும் ஆர்வம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்தார்.

மோசடிகளை அடியோடு இல்லாதொழித்து நல்லாட்சியை முன்னெடுக்கும் சீன ஜனாதிபதியின் தேர்தல் அனுபவங்கள் தமக்கு முன்னுதாரணமாக உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாகக் காணப்படும் இருதரப்பு தொடர்புகள் மற்றும் புரிந்துணர்வுகளை கௌரவத்துடன் முன்னெடுக்க வேண்டிய தன் அவசியத்தை இரு நாட்டுத் தலைவர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பேச்சுவார்த்தை மட்டத்தில் உள்ள இலங்கை - சீன சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் அடுத்த கட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, 21ஆம் நூற்றாண்டின் கடற்சார் பட்டுப்பாதை தொடர்பிலான சீனாவின் ஆர்வத்திற்கு இலங்கை முழுஅளவில் ஒத்துழைப்பு வழங்குவதாக இணக்கம் எட்டப்பட்டுள்ளது. (11)

# கொழும்பு துறைமுக நகருக்கு இணக்கம் வெளியிடவில்லை

## பிரதி வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு போட்சிட்டி (துறைமுக நகர்) நிர்மாணங்களை தொடர்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளியான தகவலை வெளியுறவு பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா மறுத்துள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதி சீனாவில் வைத்து குறித்த நிர்மாண பணிகளுக்கு இணக்கம் வெளியிட்டதாக வெளியான தகவலை அடுத்து அவர் கருத்து வெளியிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் இரு நாட்டு ஜனாதிபதிகளுக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டது. எனினும் இலங்கை தரப்பில் இருந்து உறுதி எவையும் வழங்கப்படவில்லை என்று பெரேரா தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே போட் சிட்டியை தொடர்வதற்கு சிறிசேன இணக்கம் வெளியிட்டதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் சீன உதவி வெளியுறவு அமைச்சரின் தகவல்படி, குறித்த திட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை தீர்த்த பின்னர், நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படலாம் என்று சிறிசேன குறிப்பிட்டதாக தெரிவித்துள்ளார். (11)

# எதிர்க்கட்சித் தலைவராக தினேஸை நியமிக்க சு.க.கோரிக்கை

ரோயல் கல்லூரியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்ற தினேஸ் குணவர்த்தனவை எதிர்க் கட்சி தலைவராக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ரோயல் கல்லூரியில் ஒரே வகுப்பில் கற்ற ரணில் விக்கிரமசிங்கவும் தினேஸ் குணவர்த்தனவும் அண்மையில் ரோயல் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் ஒன்றாக பங்கேற்றனர். ஏற்கெனவே நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் உட்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் கையெழுத்துக்களை பெறுவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே மற்றும் ஒரு ரோயல் பழைய மாணவரான தினேஸ் குணவர்த்தனவை எதிர்க் கட்சி தலைவராக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (11)



Free Home Delivery
Jaffna Peninsula
19.5 Lits - Pure Drinking
WATER
Rs 220.00
G.S.B - MARKETING
174, Navalar Road, Jaffna.
021 - 7201660, 077 - 1042244
(9916)


## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

சங்கானை பட்டின அபிவிருத்தி சபையின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று 28.03.2015 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆசைப்பிள்ளை அன் சன் நகை மாட மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் J/181, J/178, J/180, J/179 போன்ற கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சங்கானையின் அபிவிருத்தியில் அக்கறையுடையோர் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கு.குணஶ்ரீ, செயலாளர்,
(சி-495) சங்கானை பட்டின அபிவிருத்திச்சபை, சங்கானை.

# தமிழர் தரப்பின் தீவிரப் போக்கே மோடி-இலங்கை உறவுக்குக் காரணம்

## ஐ.ஏ. என்.எஸ் விளக்கம்

(புதுடில்லி)

தமிழர் தரப்பின் தீவிரவாதப்போக்கை அடுத்தே இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் உறவை கட்டியெழுப்ப ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.ஏ.என்.எஸ் செய்தி சேவையின் மூத்த செய்தியாளர் வீ.நாராயணசாமி இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தநிலையில் மோடி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள தமிழர்களின் மனங்களை கவர்ந்துள்ளது.

மோடியின் இந்த விஜயம் நெகிழ்வுத்தன்மையற்ற வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை பரீட்சிக்கும் நடவடிக்கையாகும்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் விக்னேஸ்வரன், இனப்படுகொலை தொடர்பில் வடக்கு மாகாண சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்.

அதில் இலங்கையின் அரசாங்கங்கள் இனப்படுகொலைகளில் ஈடுபட்டதாக அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தநிலையில், இலங்கையின் எந்தவொரு பொறிமுறையிலும் தமிழர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்று அவர் கூறியிருந்தார்.

எனவே இனப்படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணையை அவர் கோரியிருந்தார்.

இதன்போது இலங்கையில் உள்ள இந்தியர்கள், இந்திய பிரதமர் மோடி, விக்னேஸ்வரனுடன பொது நிகழ்வுகளில் கொழும்பிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ பங்கேற்பதை தவிர்ப்பது நல்லது என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர் என்றும் நாராயணசாமி குறிப்பிட்டுள்ளார். (11)


கோடை கால
ஃபேஷியல்கள்

(சி-494)
இப்போது தூரிகையில்...
குளிரூட்டப்பட்ட இதமான சூழலில்
எமது வழமையான கட்டணங்களில்
செய்து கொள்ளலாம்.
முற்பதிவுகளுடன் ஞாயிறுகளிலும்
ஃபேஷியல் செய்து கொள்ளலாம்
தூரிகை
பியூட்டி பார்லர்
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி


# வீரவன்சவுக்கு அழைப்பு

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ நேற்று இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

வீரவன்ஸவுக்கு எதிராக் கிடைத்துள்ள முறைப்பாடு குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீரவன்ஸ சொத்து குவிப்பு தொடர்பாக வாக்குமூலம் வழங்க கடந்த 9 ஆம் திகதி முதல் தடவையாக இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடி விசாரணை ஆணைக்குழுவிற்கு சென்றிருந்தார். (11)



நீங்கள் ஓய்வுபெற்று விட்டீர்களா?
உங்களின் ஓய்வுகாலத்தினை அனுபவிக்கும் அதேவேளை பணம் சம்பாதிப்பதையும் தொடர இதோ ஓர் வாய்ப்பு ஒரு கதவு மூடப்படும் போது நாம் இன்னுமொரு கதவை உங்களுக்காக திறக்கின்றோம். உங்கள் பயணத்தினை இப்பொழுதே ஆரம்பியுங்கள்.
■ வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து ஓய்வுபெற்றவர்களுக்கு முன்னுரிமை.
Contact:-62/6 Stanley Road, Jaffna.
T.P:-0777121868
(9912)


1ம் ஆண்டு நினைவு நாள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 28 |
| 12 | 03 |
| 1945 | 2014 |

அமரர்

## ஐயம்பிள்ளை சோமாவதி

அன்புடனும் பண்புடனும் பாசமழை பொழிந்து
ஊர் உலகம் எம்மைப் போற்ற
நல்லறிவு புகட்டி வாழ வழிகாட்டி
எம் உயர்வுக் கெல்லாம் ஏணியாக நின்று
எம்மை உயர்த்தி விட்ட அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பட்டின சபை ஒழுங்கை,
மானிப்பாய்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசாங்கம் என்பது அரசியல் ரீதியான மோசடி!

## லால் காந்த விமர்சிப்பு

**மைத்திரி அரசாங்கத்தை தேசிய அரசாங்கம் எனக் கூறுவது அரசியல் ரீதியான மோசடியாகும் என ஜே.வி.பி.யின் மாகாணசபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டாக இணைந்து ஏற்படுத்திக் கொண்ட அரசாங்கத்தை தேசிய அரசாங்கம் எனக் கூற முடியாது.

தற்போதைய அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த தேசிய அரசாங்கம் திருடனதும் அவனது தாயினதும் அரசாங்கமாக மாற்றமடைந்துள்ளது. எனவே திருடர்களுக்கு தண்டனை விதிக்கப்படும் என எதிர்பார்க்க முடியாது. நல்லாட்சி அரசாங்கத் தின் ஊடாக மக்களுக்கு நன்மை ஏற்படும் எனக் கருதப்பட முடியாது. மகிந்த ராஜபக்ஷ நல்லவர். அவரைச் சுற்றி இருப்பவர்களே கெட்டவர்கள் என பலர் கூறினார்கள்.

மகிந்த ராஜபக்ஷ வீடு சென்றுள்ளார். எனினும் சுற்றி இருந்தவர்கள் தொடர்ந்தும் பதவி வகிக்கின்றார்கள்.

ரணில் பிரதமர் பதவியை வகிக்க வேண்டுமாயின், சுற்றி இருப்பவர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது..

தேசிய அரசாங்கத்தின் ஊடாக திருடர்களை பிடிக்க முடியாது என லால்காந்த தெரிவித்துள்ளார்.

தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# நிறைவேற்று அதிகாரங்கள் பகிர வேண்டியது அவசியம்

## அநுர எம்.பி. வலியுறுத்து



(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதியிடம் உள்ள அனைத்து அதிகாரங்களும் பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவைக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-5)


# சேவையை பாராட்டி பிரியாமல் விடையளிக்கின்றோம்



**உயர் திரு.சுந்தரம் அருமைநாயகம்**

B.Com யாழ்ப்பாணம், P.Gdm ரஜரட்டை, GDPA சிங்கப்பூர், M.PA (India) SLAS

(இலங்கை நிர்வாக சேவை விசேட தரம்)

யாழ். மாவட்டத்தின் அரசாங்க அதிபராக சீரிய கடமையாற்றி இடம் மாற்றம் பெற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு செல்லும் உயர் திரு.சுந்தரம் அருமைநாயகம் அவர்கள் செல்லும் இடம் எல்லாம் சீரும் சிறப்பும் பெற வாழ்த்தி விடையளிக்கின்றோம்.

**இறை துதி வெண்பா**

ஆற்றரிய ஆற்றலொடு அரும்பணிகள் ஆற்றியுடன்
ஏற்றரிய ஏற்றமதை ஏற்பதுவாய்- போற்றவுடன்
எண்ணிடு யாழ். அரச அதிபர் இன்னருமை நாயகந்தன்
பண்ணுதிறம் பகரவிறை காப்பு.

பாராட்டு விருத்தம்

தளமது கோளா வில்மேல் தானுமக் கரைப்பற் றாங்கே
வளமுள முற்ற நல்லோர் வந்தசுந் தரனார் தந்த
அளவெழு மறிவி னாளர் அருமைநா யகனா ரெங்கள்
களமுறு சேவை தன்னைக் கருத்தினில் இருந்த லாமோ!

**வாழ்த்தி வரவேற்போர்**

வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) யாழ். தூர சேவைப் பேருந்து உரிமையாளர்களின் கம்பனி நிர்வாகத்தினர், உரிமையாளர்கள், பணியாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள்.

(9914)



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 29 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4307 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 85 1/4 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4312 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 46 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L லண்டன் PR<br>தொ.இ: B/4308 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 48 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/4316 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 56 செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில் A/L/ சொந்த தொழல்<br>தொ.இ: B/4310 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 16 சூரிசெவ் 2 ல்<br>உயரம்: 5'2"தகைமை/தொழில்: A/L லண்டன் PR<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4317 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:16 3/4 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC, MSC/ லண்டன் PR<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/4313 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 16 சூரிசெவ் 3 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ கணிய அளவையாளர்<br>தொ.இ: G/4318 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# இராசி பலன்

28.03.2015

(பங்குனி 14, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு

அட்டமி காலை 6.31 மணிவரை

திருவாதிரை முற்பகல் 8.23 மணிவரை

இராகுகாலம் 9.14-10.44 மணிவரை

சுபநேரம் 3.14-4.44 மணிவரை

ஸ்ரீராம நவமி

வளவன்

**மேடம்:** நீண்டநாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வெற்றிகரமான செய்திகள் வந்து சேரலாம், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்சியான செய்திகள் வந்து சேரலாம், அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் சில மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், தூரத்து உறவினர்களின் வருகையுண்டு, எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**சிம்மம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு தடையாக இருந்தவர்கள் விலகுவர், காரிய வெற்றிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர், தந்தைவழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்புகளை அடையும் நாள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நேரம், பிரயாண பயமுண்டு, போசன சுகக்குறைவான நாள்.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், பகைவர் விலகுவர், உடல்நலம் சிறாகும், கடன்கள் வசூலாகும் நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் கைகூடும் வாய்ப்புண்டு, உடல்நலம் சீராகும், சுப தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப செலவுகள் கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 170**

## பயத்தை எதிர்கொள்ளல்



...நமது தியான நிகழ்ச்சிகளில் நாம் மக்களை வழி காட்டுதலுடன் கூடிய தியானத்திற்குள் எடுத்துச் சென்று அதில் அவர்கள் இன்னும் 24 மணி நேரத்தில் இறந்து விடுவார்கள் என்றும், அதற்குள் அவர்கள் முடிக்க விரும்பும் எல்லா விடயங்களையும் முடித்துவிட வேண்டும் என்பதையும் கற்பனைக் காட்சியாக மனதில் உருவகப்படுத்திப் பார்க்குமாறு சொல்லப்படுகிறது. அது ஒரு அற்புதமான தியானமுறை.

அவர்கள் அவர்களுடைய இறப்பையும் இறுதிச் சடங்கையும் கூட கற்பனைக் காட்சியாக உருவகப் படுத்திப் பார்க்குமாறு செய்யப்படுகிறார்கள்.

ஒருமுறை இந்த தியானத்திற்குப் பிறகு ஒரு சிறுமி அவளது எண்ணத்தைப் பகிர்ந்துகொண்டாள். அவள் சொன்னாள், ஸ்வாமிஜி நான் ஒரு கடையில் ஒரு சுவரொட்டியைப் பார்த்தேன். அதில் நீங்கள் திட்டமிடும் பொழுது வருங்காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு உறுதியாகத் திட்டமிடுங்கள்.

அதைச் செயற்படுத்தும்பொழுது அடுத்த நிமிடம் நீங்கள் இறந்து போய்விடப்போவதைப் போல் செயற்படுத்துங்கள்- என்று எழுதியிருந்தது.

அதன் உண்மையான பொருளை இந்தத் தியானம் செய்த பிறகே புரிந்துகொண்டேன். நான் அற்புதம் என்று சொன்னேன்!

பாருங்கள்... திட்டமிடும் பொழுது வருங்காலத்தை மனதில் கொண்டு திட்டமிட்டால் பின்னர் சில வருடங்களுக்காவது நிறைய மாற்றியமைத்துக்கொண்டிருக்காமல் இருக்கலாம்.

ஆனால், செயற்படுத்தும்பொழுது பிரதான திட்டத்திலிருந்து எடுத்துக் கொண்ட ஒவ்வொரு உபவேலையையும் ஒரு சின்ன குறைபாடுகூட இல்லாமல் வெற்றிகரமாக முடிக்கப்பட வேண்டும்.

பிறகு ஒருவேளை நீங்கள் இறக்க நேர்ந் தால்கூட முடிந்த வரை யில் எல்லாமே முழுமையாக இருக்கும்; மக்களுக்கு சூழ்நிலைக்கேற்றவாறு பின் தொடரவோ அல்லது மாற்றவோ பிரதான திட்டம் அப்படியே இன்னமும் ஒரு குறிப்பாக இருக்கும்.

நீங்கள் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு உப வேலையையும் தாமதமின்றி செய்தால்தான் இதைச் சாதிக்க முடியும்.

பெரும்பாலும் தள்ளிப்போடுவதே உங்களை வறுமைக்கு எடுத்துச் செல்கிறது. வறுமை என்பது உங்களின் சொந்தத் தேர்வு.

நீங்கள் முடிபுகளை தள்ளிப் போடும் பொழுது வறுமையை நோக்கி அடியெடுத்து வைக்கிறீர்கள். ஆனால், இதை நீங்கள் அறியவில்லை.

நீங்கள் கடவுளால் சரியாக நடத்தப்படவில்லையென்றும் கனவுகளை நிஜமாக்க முடியாமைக்குக் காரணம் உங்கள் வாழ்க்கை மிகவும் குறுகியதாக இருப்பதே என்றும் நினைக்கிறீர்கள். உங்களுடைய எல்லாச் சக்தியையும் நீங்கள் தெளிவுடன் சரியான வழியில் உபயோகப்படுத்தியிருந்தால் இதுபோன்று எண்ண மாட்டீர்கள்; எப்பொழுதும் இறக்கத் தயார்ராக இருப்பீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



## அதிசய உலகம்

### உலகிலேயே முதன்முறையாக கண்ணாடிக்கதவுகளால் ஜொலிக்கும் தோட்டம்

கனடாவில் உலகிலேயே முதன் முறையாக கூரையின் மேல் கண்ணாடி கதவுகளால் மூடப்பட்ட தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

கனடாவின் மொன்றியலில் (Montreal) உலகின் முதலாவது கூரையின் மேற்பரப்பு வர்த்தக தோட்டம் (World's First Commercial Rooftop Green House) அமைக்கப்




பட்டுள்ளது.

நகர்ப்புற விவசாய நிறுவனமான Lufa Farms தொழிலதிபரான Mohamed Hage மற்றும் அவரது குழுவினரான Lauren Rathmell- Kurt Lynn மற்றும் Yahya Badran ஆகியோர் இணைந்து இந்த தோட்டத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்த தோட்டத்தில் ஆண்டுதோறும் 3,000றக்கும் மேற்பட்ட மொன்றியல் மக்களிற்கு தேவையான மரக்கறிவகைகளை பெறக்கூடியதாக இருக்கின்றது.

விளைபொருட்கள் தினமும் காலையில் அறுவடை செய்யப்பட்டு கூடைகளில் வாடிக்கையாளர்களிற்கு விநியோகிக்கப்படுகின்றது.

செயற்கை பூச்சி கொல்லிகள் எதுவும் பயன்படுத்தாது மறு சுழற்சி மழைநீர் மற்றும் இயற்கை வளங்களை உபயோகித்து பயிர்கள் வளர்க்கப்படுவது சிறப்பம்சமாகும்.



## சமைப்போம் சுவைப்போம்

### பேரீச்சம்பழம் கேக்

**தே.பொருட்கள்:**



பேரீச்சம் பழம் - 1 கப் (பொடியாக நறுக்கியது)

மைதா - 2 1/2 கப்

பொடித்த சர்க்கரை - 1/2 கப்

வெண்ணெய் - 11/2 கப்

கண்டன்ஸ்டு மில்க் - 1/2 லி

பால் - 11/2 கப்

பேக்கிங் சோடா - 2 தேக்கரண்டி, வெனிலா எஸன்ஸ் - 1 தேக்கரண்டி


**செய்முறை:**

பேரிச்சம் பழத்துடன் 3 தேக்கரண்டி மைதா சேர்த்து கலந்து வைக்கவும். பின் ஒரு பாத்திரத்தில் பொடித்த சர்க்கரை, வெண்ணெய் சேர்த்து electric beater கொண்டு நன்கு கலக்கவும். பின் அதனுடன் கண்டன்ஸ்டு மில்க், பால், மைதா, வெனிலா எசன்ஸ் சேர்த்து நன்கு கலக்கவும். பின் பேரீச்சம் பழம் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். பின் tray இல் வெண்ணெய் தடவி, மைதா லேசாக தூவி கலந்தவற்றை ஊற்றி அவனில் 180 degree இல் பேக் செய்யவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு சம்பந்தனே பொருத்தமானவர்!

## முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு



**(கொழும்பு)**

**கூட்டுக் கட்சிகளின் தேசிய அரசாங்கத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியே பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக வேண்டும். நிலவி வரும் அரசியல் சூழ்நிலைக்கு அமைய சம்பந்தன் மட்டுமே எதிர்க்கட்சி தலைவருக்கு மிகப் பொருத்தமானவர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக்கினால் பூரண ஒத்துழைப்பினை வழங்கி ஆதரிப்பதற்கு தயாராக உள்ளதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.**

தேசிய அரசாங்கத்தின் கூட்டணி ஆட்சியில் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கும் நிலையில். இது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டினை வினவிய போதே அக்கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஹசன் அலி மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கத்தின் ஆட்சியில் ஜனநாயகம் ஓரளவேனும் பலப்பட்டிருக்கின்றது. சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு ஜனாதிபதியும் பிரதமரும் முன்னுரிமை வழங்கி செயற்படுகின்றனர். எனினும் பாராளுமன்றத்தில் இனவாத பிரதிநிதிகள் இன்னும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் இன்றைய நடைமுறைச் சூழ்நிலைக்கு அமைய பாராளுமன்றத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி எதிர்க்கட்சியாக வர வேண்டும்.

சிறுபான்மை கட்சிகளை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்ற நினைக்கும் ஒருசில சிங்கள கட்சிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும் சிறுபான்மை தலைமைகளுக்கான அங்கீகாரத்தினை வழங்கவும் இது நல்லதொரு சந்தர்ப்பம்.

அதேபோல் இன்று பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளில் மிகவும் அனுபவம் மிக்கவரும் இனவாதத்தினை பேசாத ஒரே தலைவரும் சம்பந்தன் மட்டுமே ஆவார்.

மேலும் சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவர் பொறுப்பிற்கு மிகவும் பொருத்தமானவர். சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு தீர்வு எட்டவும் நாட்டின் தேசிய ஒற்றுமையினை கட்டியெழுப்பவும் இவ்வாறான தீர்மானங்கள் வெற்றியளிக்கும். அதேபோல் இனவாத செயற்பாடுகளில் இருந்து விடுபட வேண்டுமாயின் தமிழ் தலைவர் ஒருவரை அதுவும் தற்போதைய பாராளுமன்றத்தில் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்ற சம்பந்தனை நியமிக்க வேண்டும்.

இலங்கை வரலாற்றில் தமிழ் தலைவர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக கடமையாற்றியுள்ளார். அதன் பின்னர் ஏற்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பமே இது. எனவே அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக சம்பந்தனை சபாநாயகர் நியமிப்பாராயின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது பூரண ஆதரவினை வழங்கத் தயாராகவுள்ளது.

அதேபோல் சம்பந்தன் கூட்டணியுடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்படவும் தயாராகவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## அதி உயர் பாதுகாப்பு வலயங்களை குடியிருப்புக்களாக மாற்றக்கூடாது

### தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியம் கருத்து

வடபகுதி தமிழர்களுக்கு சொந்தமான காணியை பகிர்ந்தளித்தமை தவறில்லை என தெரிவிக்கும் தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் ஊடக பேச்சாளரும் பேராசிரியருமான வசந்த பண்டார அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி விட்டு அவ்விடத்தினை பகிர்ந்தளிப்பது தொடர்பில் தமக்கு உடன்பாடு இல்லையெனவும் தெரிவித்தார்.

கொழும்பு பொரளை தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதி தமிழ் மக்களுக்கு காணி வழங்குவதற்கு எதிரான கருத்துக்களை நாம் ஒருபோதும் வெளியிடமாட்டோம். அந்த மக்களுக்கு காணி வழங்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உள்ளது என்ற கருத்திலும் நாம் உறுதியாகவுள்ளோம். ஆனால் அதற்காக வடக்கில் பல விவசாய நிலங்கள் உள்ளன. அவற்றைக் கொடுத்தால் அதனால் அம்மக்கள் பயனடைவர். அவர்களது பொருளாதார தொழில் தேவைக்கான சூழலையும் உருவாக்கிக் கொள்வர்.

மாறாக அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களிலுள்ள காணிகளை மக்களுக்கு வழங்குவதால் நாட்டின் தேசிய பாதுகாப்பு சீர்குலைவது மட்டுமன்றி மக்களுக்கு பொருத்தமானதொரு வாழ்க்கை சூழலை அமைத்துக்கொள்வது கடினமாயிருக்கும். இவ்வாறிருக்க அமைச்சர் சுவாமிநாதன் சம்பூர் கடற்படை முகாமை நீக்கி பொது மக்களுக்கு அவ்விடங்களை கையளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். இவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். கடற்படை தளங்களோ அல்லது அதியுயர் பாதுகாப்பு வலயத்திலோ மக்களுக்கு சிறந்ததொரு வாழ்க்கை சூழலை அமைத்துக்கொடுக்க முடியாது. அத்துடன் அவர்கள் வாழ்வாதாரத்துக்கு தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அந்த சூழல் பொருத்தமானதாக அமையாது.

இப்போது ரணில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பிரித்து வழங்கியுள்ள காரணத்தால் அது தொடர்பில் பேசுவதில் பயனில்லை. ஆனால் இதன் பின்விளைவுகளை ரணில் சந்திப்பார் என்பது உறுதி.

**பெங்கமுவே நாலக்க தேரர்**

ரணில் - மைத்திரி கூட்டாட்சியில் தேசிய அரசு என்ற பெயரில் அமைச்சுப்பதவிகளை பெற்றுக் கொண்டவர்கள் சுதந்திரக்கட்சியின் துரோகிகள் என தெரிவிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் உறுப்பினர் பெங்கமுவே நாலக்க தேரர் வடக்கே இருந்த 2ஆயிரத்து 400 சிங்களவர்களுக்கு காணி வழங்க வேண்டும் என தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் - மைத்திரியின் கூட்டாட்சியில் தேசிய அரசாங்கம் என்ற பெயரில் இணைந்து கொண்டுள்ளவர்கள் தேசிய துரோகிகளாக கருதப்பட வேண்டியவர்கள். அவர்கள் நாட்டு நலன்கருதி ஆட்சிக்கு வந்தவர்கள் அல்ல. தமது சொந்த தேவைகளை நிறைவேற்றி கொள்ளவே ரணில் அரசாங்கத்தில் இணைந்து கொண்டுள்ளனர். அத்துடன் அதிகார குறைப்பும் பிரிவினைவாதிகளை வலுவடையச்செய்யும் இதனை உணர்ந்துகொண்டுள்ள மக்களுக்காக மகிந்த மீண்டும் வர வேண்டியது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




75 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

வல்லி துரைராஜா
(விஷ்ணுசித்தன்)

27.03.2015 நேற்று வெள்ளிக்கிழமை தனது 75 ஆவது பிறந்த நாளைத் தனது இல்லத்தில் கொண்டாடிய வல்லி துரைராஜா (விஷ்ணுசித்தன்) அவர்கள் எம் பெருமான் ஸ்ரீ வல்லிபுரநாதனின் அருளாசியைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## தபால் திணைக்களத்திற்கு ஒதுக்கிய 1500 மில்லியன் ரூபா பணம் மாயம்

தபால் திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடந்த அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட 1500 மில்லியன் ரூபாய் பணத்திற்கு இதுவரை என்ன நடந்ததென்று தெரியவில்லை என தபால் சேவை மற்றும் முஸ்லிம் மத விவகார அமைச்சர் எம்.எச்.அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வானொலி சேவை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தினால் தபால் திணைக்கள அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட 1500 மில்லியன் ரூபா பணம் எந்த அபிவிருத்திக்கு பயன்படுத்தியதென இதுவரை தகவல் வெளியாகவில்லை என அவர் தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தின் பல்வேறு அபிவிருத்தி திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டிற்காக 75 மில்லியன் ரூபாவும், 2016ஆம் ஆண்டிற்காக 750 மில்லியன் ரூபாய் பணமும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த பணத்திற்கு என்ன நடந்ததென ஆராய்வதற்காக எதிர்வரும் காலங்களில் விசாரணை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சட்டவிரோத குடியேறிகளை தடுக்க புதிய சட்ட திருத்தங்கள் விரைவில்

### நீதியமைச்சர் தெரிவிப்பு



சட்டவிரோத குடியேறிகளை தடுப்பதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு சட்ட மூலத்திற்கு புதிய சட்ட சீர்த்திரு த்தங்களை கொண்டு வரவுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதற்காக அமைச்சரவை அனுமதியை பெற்று கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நீதியமைச்சர் அண்மையில் அவுஸ்திரேலிய அரசாங்க த்தின் பிரதிநிதிகள் சிலரை சந்தித்திருந்தார்.

இதன்போது, சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக இலங்கை மேற்கொண்டுள்ள சட்ட நடவடிக்கைக்கு அவுஸ்திரேலிய அதிகாரிகள் வரவேற்பை வெளியிட்டதாக அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில், சட்ட விரோத மனித கடத்தல் வர்த்தகத்தை தடுப்பதற்காக பல அமைச்சுக்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்ததாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வல்லை உவர் நீரோடையில் கழிவுகள் கொட்டப்படுகின்றன

(கரணவாய்)

வடமராட்சி வல்லை பாலத்தை அண்மித்த பகுதியில் உள்ள உவர் நீரோடையில் கடந்த சில நாட்களாக திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

வல்லைப் பாலத்தை அண்மித்த பகுதியில் இருந்து அச்சுவேலிக்குச் செல்லும் வீதியருகே உவர் நீரோடையும் சிறிய பற்றைகளும் காணப்படுகின்றன.





கடந்த ஐந்து நாட்களாக மேற்படி பகுதியில் மலக்கழிவுகள் உட்பட திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன.

இக்கழிவுகள் நீரோட்டத்தில் கலந்து முள்ளி தொடக்கம் செல்வச் சந்நிதி நீரோடை வாய்க்கால் வரையும் சென்றடைகின்றன.

இவ்வாறு எந்தவித பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி கழிவுகள் கொட்டப்படுவதனால் நோய்கள் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக அச்சம் வெளியிடப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரி கள் இதில் தலையிட்டு உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-60)




# இழுவைப்படகை பயன்படுத்தி மீன்பிடிக்க இலங்கை கடற்பரப்பில் அனுமதியில்லை

## பிரதமர் ரணில் விடாப்பிடி

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் இழுவைப் படகில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மீனவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் மீனவர் சங்கத் தலைவர்கள், இந்திய இழுவைப் படகுகள் எமது வடபகுதிக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மின்பிடியில் ஈடுபடுவதனால் நாம் எமது கடற்பரப்பிற்குள் 4 கிலோ மீற்றர் தூர எல்லைக்குள்ளும் செல்ல முடியாத நிலையுள்ளது.

இதனால் வடபகுதி மீனவர்கள் தொழில் அற்ற நிலையினை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் வங்கிகளில் கடன்களைப் பெற்றவர்கள் நஞ்சு குடிக்கும் நிலையிலுள்ளனர்.

ஆகையினால் இந்திய இழுவைப் படகுகளை இலங்கை கடற்பரப்பிற்குள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டாது என்ற உறுதியான முடிவு எடுக்கப்படல் வேண்டும்.

இந்திய இழுவைப்படகுகளி னால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படல் வேண்டும்.

1976 ஆம் ஆண்டு இந்தியாவில் இழுவைப் படகு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் இழுவைப் படகுகளினால் அன்று முதல் இன்று வரை வடபகுதி மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்திய இழுவைப்படகுகளி னால் வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு, மன்னார், தீவகத்தை சேர்ந்த மீனவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது இப்பிரதேச மீனவர்கள் இரு நாட்டு அரசுகளினால் புறந்தள்ளப்பட்டு வருகின்றனர். இந்நிலையினை புதிய அரசானது மாற்ற வேண்டும்.

எமது கடல் வளத்திற்குள் அனுமதியின்றி அத்துமிறி நுழைந்து சட்ட விரோத தொழிலில் ஈடுபடுபவர்களை எமது நாட்டு கடற்படையினர் கைதுசெய்கின்ற போதிலும் பின்னர் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் அல்லது அரசியல் காரணங்களுக்காக விடுதலை செய்யப்படுவதனை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

கைதுசெய்யப்படும் இந்திய மீனவர்களின் இழுவை மடிகளையாவது எமது அரசு பறிமுதல் செய்ய நடவடிக்கையெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இக்கோரிக்கைகளுக்கு பதிலளித்த பிரதமர், இம்மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் எவ்வித பிரச்சினையும் கிடையாது.

இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளை பறித்த பிற்பாடு தான் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என இந்திய அரசிற்கு கூறியுள்ளோம்.

தென்பகுதி மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் பேசித் தீர்வினை காண வேண்டும்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எதிர் காலங்களில் கடன், நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை குறித்த சந்திப்பில் கலந்து கொண்டு மீனவர்களின் பிரச்சினைகளை சில அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தடுத்துக் கொண்டு தாமே அனைத்தையும் கூறிக்கொண்டிருந்தனர். இதனால் குறித்த கூட்டம் முடிவடைந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவுடன் முரண்பட்டுக் கொண்டனர். (இ-4)

## மணிவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி சேதுகாவலர் வித்தியாசாலையிலிருந்து மிக அண்மையில் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி இராஜேஸ்வரி திருஞானசிவம் அவர்களின் மணிவிழா நாளை 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. விழா நாயகி மங்கள வாத்தியத்துடன் கைதடி கிராமத்தவர்களால் ஊர்வலமாக அழைத்து வரப்படவுள்ளார்.

கைதடி சேதுகாவலர் வித்தியாசாலைக்கு அருகாமையிலுள்ள மாவடிக் கந்தன் ஆலய மண்டபத்தில் கைதடி சேதுகாவலர் வித்தியாசாலை அதிபர் திருமதி. சியாமளா கணராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை பாடசாலையின் ஆசிரியை திரும்தி சோதீஸ்வரி நாகராஜாவும், ஆசியுரையை சிவசிறி ,யோ.குருசாமிக் குருக்களும் நிகழ்த்தவுள்ளனர்.

மணி விழா மலர் வெளியீட்டை தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ்ப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.சிறிதரன் நிகழ்த்தவுள்ளார். (இ-254)

## ஆஞ்சநேயர் கோவிலில் இசை ஆராதனை இன்று

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் ஸ்ரீராம இசை ஆராதனை பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (இ

## சமஸ்கிருத வகுப்பு ஆரம்ப வைபவம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச சமஸ்கிருத வகுப்பு ஆரம்ப வைபவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. மா.அனந்தலெட்சுமி தலைமையில் யாழ்.பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுலத்தில் இடம்பெறவுள்ளது. (இ

## வீதியில் கிளம்பும் தூசினால் பயணிகள் அசௌகரியம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு அம்பன் தொடக்கம் நாகர் கோவில், உடுத்துறை, முள்ளியான் வரையான வீதியில் பயணம் செய்யும் பயணிகள் தூசினால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்படி வீதிகள் கடந்த பல ஆண்டுகளாக செப்பனிடப்படாத தால் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்கின்ற போது வீதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் செல்லும் பயணிகள் தமது முகத்தை துணியால் மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வாகனங்கள் செல்லும் போது தூசு வெளிக்கிளம்புவதனால் பயணிகள் இவ்வாறு பலத்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

நீண்டகாலம் புனரமைப்பின்றிக் காணப்படும் இவ்வீதிகளில் கிரவல் மற்றும் செம்மண் என்பன காணப்படுவதனால் வெப்ப காலங்களில் அதிகளவான தூசு வெளி வருகின்றது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் அக்கறை எடுத்து பயணிகளின் அசௌகரியங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

## நினைவுப் பேருரை

மறைந்த பேராசிரியர் சி.சிவஞானசுந்தரத்தின் நினைவுப் பேருரை எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

உயிரியல் தொழில்நுட்பம்-மனித முன்னேற்றத்துக்கும் மனித அபிவிருத்திக்காகவும் என்ற தலைப்பில் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் ஆங்கிலமொழியில் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

இதில் நினைவுப் பெருரை அடங்கிய கையேடு இலவசமாக வழங்கப்படவுள்ளது. (இ-3)

## வீதியைப் புனரமைத்துத் தருமாறு வரணி வடக்கு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை வீதி நீண்டகாலமாக புனரமைப்பின்றி குன்றும் குழியுமாக மக்கள் போக்குவரத்துக்கு உதவாதவாறு மிக மோசமான நிலையில் உள்ளது.

இவ்வீதியால் மாசேரி ஜே/340 மக்கள் பிரயாணம் செய்யும் மிக முக்கிய வீதியாகும்.

அத்துடன் மழை காலங்களில் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் பெரும் அவலமுற்ற நிலையில் இவ்வீதியில் பாடசாலை, முன்பள்ளி, கிராம அலுவலர் அலுவலகம் ஜே/339, பனை தென்னை வள கூ. சங்கம் போன்றன அமைந்துள்ளதால் மக்கள் இவ் வீதியை பயன்படுத்துகின்றனர்.

இதனால் இவ்வீதியை உரிய தரப்பினர் கவனமெடுத்து மக்களின் அவல நிலையை போக்க முன்வர வேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ)

## குருதிக்கொடை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களின் வருடாந்த உற்சவங்களை முன்னிட்டு வருடா வருடம் இடம்பெற்றுவரும் குருதிக்கொடை நிகழ்வு நாளை 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மூளாய்வீதி, வட்டுக்கோட்டை, ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த குருதிக்கொடை நிகழ்வில் கலந்து கொண்டு உயிர்காக்கும் பணியில் பங்கு கொள்ளுமாறு அடியவர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றனர் ஆலய பரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## HIGHER EDUCATION FOR THE TWENTY FIRST CENTUARY (HETC) PROJECT WALK IN INTERVIEW

Applications are invited from suitable candidates for the following post to work under the guidance of the Grant Coordinator of the study programme (Physical Science)

**PROJECT MANAGEMENT ASSISTANT (ON CONTRACT)**

**Required Qualifications and Skills:**
Should have
*Passed G.C.E. (A/L) examination.
*Knowledge and skills in MS Office applications, email and internet communication
*Written and oral communication skills especially in English to deal with people of diverse backgrounds.
*Skills in setting priority and managing multiple assignments
*systematic record keeping skills and experience in preparing reports
Must be
*18-35 years old
*an initiator in taking responsibilities and
*an efficient team worker

**Remuneration:** Rs.15,000/-per month(fixed)
**Contract period:** End of December 2015
**Recruitment:** By interview Successful candidates should be able to start work immidiately.

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV in the prescribed form available in the University website www.jfn.ac.lk relevant documents and National identity card on 04.04.2015 at 9.30 am in the Board Room, University of Jaffna, Thirunelvely. Canvassing in any form will be a disqualification.

Vice-Chancellor
University of Jaffna.

## ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் பான் ஏஷியா வங்கி யாழ்ப்பாணக்கிளை

**ஓய்வூதியர்களுக்கான கடன் வசதியின் சலுகைகள்**

- கடனைப் பெற்றுக்கொள்ள பிணைகள் தேவையில்லை
- ரூ. 1,000,000/- வரை கடன் தொகை
- 7 வருட மீள செலுத்தும் காலம்
- 70 வயது வரை கடனை மீள செலுத்தக் கூடிய வசதி
- கடனைப் பெறுபவருக்கு மரணம் சம்பவிக்கும் போது குடும்பத்தினருக்கு கடன் சுமையை வழங்காமல் காப்புறுதியினால் கடன் தொகை விலக்களிக்கப்படும் மேலும் பின்னுரித்தாளருக்கான விசேட பணச்சலுகைகள் (ரூ. 100,000/- கடனிற்கு கடன் காப்பீட்டிற்காக ரூ. 602/- மட்டுமே)

**ஓய்வூதியர்களுக்கான சிறப்பு சேமிப்புக் கணக்கின் மேலதிக சலுகைகள்**

- உங்கள் விசேட சேமிப்புக் கணக்கிற்கு கவர்ச்சிகரமான வட்டி
- VISA குறி உள்ள எந்தவொரு ATM இலும் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி
- தனிப்பட்ட சேமிப்புப் புத்தகம் வழங்கப்படும்
- ரூ. 200/- ஆரம்ப வைப்பாக வைப்புச் செய்து கணக்கை ஆரம்பிக்க முடியும்
- இச்சலுகை ரூ. 10,000/- திற்கு அதிகமாக மாதாந்த ஓய்வூதியத் தொகையை பெற்றுக்கொள்பவர்களுக்கு வழங்கப்படும்
- ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்களும் இச்சலுகையினை பெறமுடியும்
- விதவை ஓய்வூதியப்பணம் பெறுபவர்களும் இச்சலுகையினை பெறமுடியும்

இந்த கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 29.03.2015 (ஞாயிறு) காலை 10.00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் (வண்ணார் பண்ணை சிவன் கோவில் அருகாமையில்) நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு,
**PAN ASIA BANK PLC.**
பான் ஏஷியா வங்கி
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தொலைபேசி இல.**
021- 4925118 / 021- 4976777 / 021- 4925119


Company Reg. No. PQ46

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பான் ஏஷியா வங்கி

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் விஜயரட்ணம்



திருநெல்வேலி காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விஜயரட்ணம் (ஆசாரியார்) 23.03.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை- பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளக்கொடியின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் பாசமிகு கணவரும், கேதீஸ்வரி, ஜெயரட்ணம், கோணேஸ்வரி, யோகரட்ணம், சுகிர்தரட்ணம், சதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், மணிவாசகம், கலைச்செல்வி, ஆனந்தன், லலிதா, ஜெயமலர், அஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்த்திபன், கார்த்திகா, பிரசன்னா, பிரியங்கா, பிரத்திகா, ஆரபி, பைரவி, நர்த்தனன், விதுர்ஷன், நிறோஜன், கிருத்திகன், கேசினி, கேசிகன், நிறஞ்சன் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான முத்துசாமி, சுந்தரலிங்கம், இரத்தினம், பாலசுப்பிரமணியம் மற்றும் கனகமலர், வடிவேலு, துரைசிங்கம், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, கமலாதேவி, விக்னேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரு மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.03.2015 ) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.**

**T.P:- 076 553 4708**
**021 321 0090**

**தகவல்: குடும்பத்தினர்.**

(9208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்.பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய படத்திரை நீக்கமும் கௌரவிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது...

அச்சுவேலி பத்தைமேனியைச் சேர்ந்த ஆறுமுகம் நடேசு இராசேந்திரன் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி திருமதி கே.சிவபாதசுந்தரம் முன்னிலையில் சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்தபோது...










யாழ்.கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற போது...





யாழ்.நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் போது... (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

நிகழ்வின் நிழல்கள்





1954 இல் யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறை கரையிலிருந்து தமிழகத்தின் கோடியக்கரை வரை நீந்திக்கடந்து சாதனை படைத்த தொண்டைமானாற்றைச் சேர்ந்த அமரர் முருகுப்பிள்ளை நவரத்தினசாமியின் உருவச்சிலை அண்மையில் தொண்டைமானாற்றில் திறந்து வைக்கப்பட்டது. பருத்தித்துறை பிரதேச செயலர் இ.ஜெயசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிலையினை முற்பகல் 10 மணியளவில் திறந்து வைத்தார்.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)







வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாள [illegible] ன் நன்மை கருதி வடமாகாண சுகாதார அமைச்சினால் ஆயுர்வேத வைத்தியசாலை அண்மையில் திறந்து வைக்கப்ப [illegible]

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு கடவை அமைக்கப்படவில்லை

## திடீரென விபத்து சம்பவிக்கலாம்- பொதுமக்கள் சுட்டிக்காட்டு

**(ஜெயந்திநகர்)**

**பரந்தன் ஏ-9வீதியின் 261 ஆவது மைல் கல்லுக்கு மேற்கு புறமாக அமைக்கப்பட்டுள்ள புகையிரதப் பாதைக்கு இதுவரை பாதுகாப்பு கடவை அமைக்கப்படாமை யால் அவ்வழியாக பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.**



இக்கடவையால் பரந்தன், குமரபுரம், உமையாள்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தமது தேவையின் நிமிர்த்தம் சென்றுவர வேண்டியுள்ளது.

இவ்வாறு சென்று வரும் வேளையில் திடீரென விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குமரபுரம் கிராமத்தில் கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம் உள்ளது. இப்பாடசா லையில் சுமார் 100இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இம்மாணவர்கள் குறித்த பாதுகாப்பற்ற புகையிரத கடவையினால் சென்று வருகின்றனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு பொதுமக்கள் தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே காலம் தாழ்த்தாது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையிலுள்ள புகையிரதப்பாதைக்கு பாதுகாப்பு கடவையை அமைத்துத்தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-284)

## துவிச்சக்கர வண்டிகளை அடையாளப்படுத்த பொலிஸார் புதிய செயற்றிட்டம் முன்னெடுப்பு




இரவு வேளைகளில் துவிச்சக்கர வண்டிகளை அடையாளம் காண பொலிஸார் புதிய செயற்றிட்டம்ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இரவு வேளைகளில் துவிச்சக்கர வண்டிகள் வீதியில் செல்கின்றவேளை அடையாளம் காண புதிய செயற்றிட்டத்தை வவுனியா வீதி போக்குவரத்து பொலிஸார் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.


இந்நிலையில் வவுனியா மன்னார் வீதிமற்றம் குரு மன் காடுப்பகு தியில் நேற்று முன்தினமிரவு அதிகளவான போக்குவரத்து பொலிஸார் சேவையில் ஈடு படுத்தப்பட்ட னர்.

இதன் போது அவ் வீதியால் சென்ற துவிச்சக்கர வண்டி களை பதிவு செய்த பொலி ஸார் அவற்றை இரவு வேளையில் அடை யாளம் காணக் கூடியவாறு ஒளிரும் ஸ்டிக்கர்களையும் ஒட்டினர்.

வவுனியா கலைமகள் விளையாட்டு மைதானத்தில் இச்செயற்றிட்டத்தை அன்றைய தினம் இரவு ஆரம்பித்த பொலிஸார் இத்திட்டத்தை வவுனியாவில் தொடர்ச்சியாக முன்னெடுத்து, இரவுவேளையில் ஏற்படும் விபத்துக்களை குறைப்பதக்கு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (2-250)

## இளைஞர் கழகங்களை உருவாக்க நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறை

(பனிக்கன்குளம்)




தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் புதிய தலைவர் சட்டத்தரணி எரந்திக் கவின் வழிகாட்டலில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொண்டர் அமைப்பான இளைஞர் கழகங்களை சிறந்த முறையில் உருவாக்குவதற்கான வேலைத்திட்டமொன்றுநாடாளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அந்தவகையில் கிராமங்களிலே உருவாக்கப்படுகின்ற இளைஞர் கழகங்கள் வலுவான அமைப்பாக உருவாக்கப்பட்டு அதனூடாக இளைஞர்கள் நாட்டின் சிறந்த தலைவர்களாக உருவாக்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படையான இளைஞர் கழகத்தைச் சிறந்த முறையில் உருவாக்குவதற்கான இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர் கழக தேசிய சம்மேளன பிரதிநிதிகள், மாவட்ட சம்மேளன பிரதிநிதிகள், இளைஞர் பாராளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கான கனவு காண்பிப்பதற்கல்ல வழி காட்டுவதற்கு எனும் தொனிப்பொருளில் பயிற்சிப்பட்டறை ஒன்று அண்மையில் மாங்குளத்தில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு இளைஞர் கழகத்தின் நோக்கம், செயற்பாடு, யாப்பு விதிகள்,இளைஞர்கழகம் எதற்காக அமைக்கப்படுகிறது.

அவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும். என்பது தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால,தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண கணக்காளர் றட்ணகுமார், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான சசிகுமார்,திருமதி கு.சறோஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (2-281)




## தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைதாகினர்

(குருமன்காடு)

சட்ட விரோத தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா- கனகராயன் குளம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் தொல்பொருள் அகழ்வதற்கு பயன்படுத்தக் கூடிய உபகரண ங்களுடன் குறித்த சந்தேக நபர்கள் கைதாகினர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியை சேர்ந்தவர்கள் என பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

## வீதிகள் புனரமைக்கும் பணி ஆரம்பம்

(மன்னார்)

நானாட்டன் பிரதேசத்துக்குட்பட்ட வீதிகள் சுமார் 6 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் புனரமைக்கப்படவுள்ளன. வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரின் பணிப்புரைக்கமைவாக வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நானாட்டான் உயிலங்குளம் வீதி, நானாட் டான் பொற்கேணி வீதி, நானாட்டான் முருங்கன் வீதி என்பன புனரமைக்கப் படவுள்ளன.

வீதி புனரமைப்பு பணிகளை உத்தியோகபூர் வமாக ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பங்குத்தந்தை, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் அன்பு ராஜ் லெம்பேர்ட், பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முன்யோசனை!

பிரம்மதத்தன் காசியை ஆண்ட போது போதிசத்வர். ஒரு வணிகரின் குடும்பத்தில் பிறந்தார்.

சிறு வயதிலேயே அவர் வியாபாரத்தின் நெளிவு சுளிவுகளை



அனுபவம் மிக்க வியாபாரிகளிடமிருந்து கற்று அறிந்து கொண்டார்.

எந்த விடயத்தையும் நன்கு ஆராய்ந்து அவசரப்படாமல் அவர முடிவு எடுத்து வந்தார்.

அவரது வியாபாரம் பெருத்த அளவில் நான்கு திக்குகளிலும் நன்கு நடந்து வந்தது.

காசியில் மந்தமதி என்ற வியாபாரி இருந்தான். அவன் எதையும் அவசரப்பட்டு செய்பவன்.

ஒருமுறை போதிசத்வர் வண்டிகளில் வியாபாரச் சரக்குகளை ஏற்றிக் கொண்டு புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார்.

அப்போது மந்தமதி வந்து அவரிடம் தானும் அவர் போகும் வழியில் செல்லப் போவதால் அவரோடு சேர்ந்து தன் வண்டிகளை ஓட்டிக் கொண்டு வருவதாகக் கூறினான்.

அதைக் கேட்ட போதிசத்வர் "மந்தமதி! நம் இருவர் சரக்கு வண்டிகளும் ஒரே பாதையில் செல்லும்போது சாலை அடைபட்டு மற்றவர்களின் போக்குவரத்திற்கு இடைஞ்சலே ஏற்படும்.

இதைத் தவிர்க்க நம்மில் யாராவது ஒருவர் முதலில் புறப்பட வேண்டும்.

மற்றவர் அதற்கு நாலைந்து நாட்கள் கழித்துப் புறப்பட்டால் மற்றவர்களுக்கு நம்மால் இடைஞ்சல் இருக்காது"என்றார்.

அப்போது மந்தமதி தன் மனதில் "நான் முதலில் புறப்பட்டுச் சென்றால் என் சரக்குகளை விற்று லாபம் அடைவேன்.

முதலில் நான் சாலையில் செல்வதால் அதில் சௌகரியமாகப் பயணம் செய்ய முடியும்.


வழி நெடுக உள்ள புல்லை என் மாடுகள் மேயந்து கொண்டே செல்லும்.

அதனால் அவற்றிற்காக நான் செய்ய வேண்டிய செலவு மிச்சம்.

வழியிலுள்ள மரங்களின் காய்களும் கனிகளும் முதலில் எனக்கே பறித்துக் கொள்ளக் கிடைக்கும். தண்ணீரும் நன்கு கிடைக்கும்.

என் சரக்கு முதலில் செல்வதால் அந்தந்த ஊர்களில் நான் சொல்லும் விலைக்கே வாங்கிக் கொள்வார்கள்" என்று எண்ணினான்.

மந்தமதி அவரிடம் தான் முதலில் சரக்குகளுடன் செல்வதாயும்



பிறகு அவர் சில நாட்கள் கழித்துப் புறப்படலாம் என்று கூறவே போதிசத்வரும் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டார். மந்தமதியும் அதற்காக மகிழ்ந்து போனான்.

மந்தமதி செல்ல வேண்டிய இடம் வெகு தூரத்தில் இருந்தது. வழியில் ஒரு பாலைவனம் வேறு இருந்தது. அதனால் பயணத்தில் அதைக் கடக்கப் போதிய நீரைப் பீப்பாய்களிலும், உணவையும் எடுத்துக் கொண்டு தன் சரக்கு வண்டிகளுடன் புறப்பட்டான். வியாபாரத்தில் தான் போதிசத்வரை முந்திவிட்டதாக எண்ணித் திருப்தி அடைந்தான். அவன் சில நாட்கள் பயணம் செய்தபின் பாலைவனப்பகுதியை அடைந்தான்.

அப்போது அவன் எதிரே ஒரு அழகிய வண்டி வந்தது. அதில் உயர் ஜாதி எருதுகள் பூட்டப்பட்டிருந்தன. அதில் ராஜா போன்ற ஒருவன் கம்பீரமாக உட்கார்ந்திருந்தான். அந்த வண்டியின் முன்னும் பின்னும் காவற்காரர்கள் வாள்கள், கத்திகள், ஈட்டிகள் என்று கைகளில் ஏந்திக்கொண்டு வந்தார்கள். வண்டியின் சக்கரங்களில் சேறு அப்பி இருந்தது. எல்லோருடைய தலைகள் மீது தாமரை காம்புகளும் கைகளில் தாமரை மலர்களும் இருந்தன.

வண்டியில் அமர்ந்திருந்த கனவான் போலிருந்தவன் "அடேங்கப்பா! ஒரே மழை. அதோ தென்படும் காட்டில் நீர் நிறைந்துள்ளது. ஏரிகளில் நீர் நிறைந்து கிராமங்களுக்குள் புகுந்து விட்டது............ (தொடரும்)

---

03.2015
28

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 193 - ரோம் பேரரசன் பேர்ட்டினாக்ஸ் படுகொலை செய்யப்பட்டான்.
- 845 - ரக்னார் லொட்புரொக் என்பவனின் தலைமையில் நடந்ததாகக் கருதப்படும் வைக்கிங் தாக்குதல்களுக்கு பாரிஸ் அடி பணிந்தது.
- 1802 - ஓல்பேர்ஸ் என்பவர் 2 பேலெஸ் என்ற சிறு கோளைக் கண்டுபிடித்தார்.
- 1809 - மெடெலின் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரான்ஸ் ஸ்பெயினை வென்றது.
- 1879 - ஆங்கிலேய-சூலு போர்: பிரித்தானியப் படைகள் ஹுலோபேன் நகரில் இடம்பெற்ற சமரில் படுதோல்வியடைந்தனர்.
- 1930 - கொன்ஸ்டன்டீனபில், அங்கோரா ஆகியன இஸ்தான்புல் மற்றும் அங்காரா எனப் பெயர் மாற்றம் பெற்றன.
- 1939 - ஸ்பானிய உள்நாட்டுப் போரில் பிரான்சிஸ்கோ பிராங்கோ மாட்ரிட் நகரைக் கைப்பற்றினான்.
- 1979 ஐக்கிய அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் ஓடும் சஸ்குவான ஆற்றின் கரையில் உள்ள மிடில்டன் நகரில் அணுமின் நிலையத்தில் விபத்து ஏற்பட்டது.

### பிறப்புக்கள்

- 1862 - அரிஸ்டைட் பிறயண்ட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1932)
- 1868 - மாக்சிம் கார்க்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ. 1936)
- 1892 - கோர்னெயில் ஹைமான்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1968)
- 1919 - டி. கே. பட்டம்மாள், கர்நாடக இசைப் பாடகி (இ. 2009)
- 1930 - ஜெரோமி பிரீட்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

- 1943 - எஸ். சத்தியமூர்த்தி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர்
- 1982 - வில்லியம் ஜியோக், நோபல் பரிசு பெற்ற கனேடியர் (பி. 1895)
- 2006 - வேதாத்திரி மகரிஷி, தத்துவஞானி (பி. 1911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

91

..."பள்ளி மாணவர்கள் கொலை செய்யப்பட்டு அவர்களது கிட்னி உள்ளிட்ட உடலுறுப்புகள் விற்பனை செய்யப்படுவதை ஜுகிசாவ்லா அறிகிறார். ஆனால் இந்த ரகசியம் தெரிந்து கொண்ட அவரை வில்லனின் ஆட்கள் தீர்த்துக்கட்டி விடுகிறார்கள்.

இதனால் தனது நண்பன் ரவிச்சந்திரன் மற்றும் ரகசிய போலீஸ் அதிகாரிகள் சிலருடன் சுரங்கப்பாதை அமைத்து பள்ளிக்குள் நுழைகிறார், ரஜினி. கொலைக்கும்பலை பூண்டோடு அழித்து, சிறுவர்களையும் மீட்கிறார்.

பெரும் பொருட்செலவில் தயாரிக்கப்பட்டு 02-10-1991 இல் வெளியான இந்தப்படம், ரசிகர்களை அதிகளவில் கவரவில்லை.

இந்தப் படத்தின் சிறப்பம்சம், ரஜினி ஜோடியாக பிரபல இந்தி நடிகை ஜுகி சாவ்லா நடித்தது தான்.

**இல்லறமா? துறவறமா? ரஜினி ஆலோசனை**

ரஜினிகாந்த், புகழின் உச்சியில் இருந்தபோது இல்லறத்திலிருந்து ஒதுங்கி, துறவியாக ஆலோசித்தார் என்பது, பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அது உண்மை.

1980 களின் பிற்பகுதியில்



ஜுகி சாவ்லா- ரஜினி - நாட்;டுக்கு ஒரு நல்லவன்

"ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா" இயக்கத்துடன் ரஜினிகாந்துக்கு ஈடுபாடு ஏற்பட்டது. தன்னுடைய வீட்டிலேயே அந்த இயக்கத்தினருக்கு இடம் கொடுத்தார். மிக அதிகமான புகழும், பணமும் இருந்தும்கூட ரஜினிக்கு நிம்மதி இல்லை. ஆன்மீகத்தில் பற்று அதிகரித்தது.

அப்போது, தன் குடும்ப நண்பரான ஒரு பேராசிரியரிடம் அவர் கூறினார்:-

"சார்! இந்து தர்மப்படி, குடும்ப வாழ்க்கையில் நாம் வாழும்போது, பட்டும் படாமலும் இருக்க வேண்டும். புளியம் பழமும், ஓடும் போல, ஒட்டாத நிலையில் இருக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு, உரிய கல்வியும், வாழ்க்கை பற்றிய தெளிவும் தந்துவிட்டால் போதும். சொத்துக்கள்கூட தேவையில்லை. அதிக சொத்துக்கள் அவர்களைச் சோம்பேறிகளாகவும், சுய முயற்சி இல்லாதவர்களாகவும் செய்து விடும்.

எனக்கு நல்ல மனைவி இருக்கிறார். அவர் பொறுப்பில் குழந்தைகளை விட்டு விட்டு, ஆன்மீக வழியில் செல்லலாம் என்று கருதுகிறேன்" இவ்வாறு ரஜினி கூறினார்.

**பாலசந்தரிடம் கோரிக்கை**


இந்தக் காலக்கட்டத்தில், கே.பாலசந்தரின் கவிதாலயா நிறுவனத்தின் படத்திலும், ஆர்.எம். வீரப்பனின் சத்யா மூவிஸ் படத்திலும் நடிக்க, ரஜினிகாந்த் அட்வான்ஸ் வாங்கியிருந்தார்.

ஒருநாள் திடீரென்று பாலசந்தர் வீட்டுக்கு ரஜினி சென்றார். "நான் நடித்ததெல்லாம் போதும். இனி நடிக்கமாட்டேன். நான் சாமியாராகப் போகிறேன். இந்தாங்க, நீங்க எனக்குக் கொடுத்த அட்வான்ஸ்!" என்று அட்வான்சாக வாங்கியிருந்த பணத்தை நீட்டினார்.

அந்தப் பணத்தை பாலசந்தர் வாங்கிக்கொள்ளவில்லை. ரஜினியை ஏற இறங்கப் பார்த்தார். "சாமியாராப் போகணும், அவ்வளவுதானே! சரி, போ!" என்று கூறினார்.

"இந்தப் பணத்தை பிடிங்க. நான் போறேன்" என்றார், ரஜினி. பாலசந்தர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பிறகு, "உன்னைப்பற்றி எனக்கு நல்லாத் தெரியும். இப்போ, உன் மனசிலே சாமியாரா போகணும்னு தோன்றியிருக்கு. அதை யார் தடுத்தாலும் நீ கேட்கப்போறதில்லை. அதனால் நான் அதை தடுக்கப் போறது இல்லை.

*(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 102

...பொடிய எடுத்து மூக்குக்குள்ள இழுக்கிக்கிற ஆளுகளுக்கு ஒரு கிறுக்குப் புடிக்கிற சொகம் இருக்கிற மாதிரி பூலித்தேவன் தோல்ல அடிக்கிற கவிச்சி வாசத்துல ஒரு பித்தேறிப்போச்சு கருவாச்சிக்கு.

பாசத்தக் குடுத்து வாங்க ஆளில்லாமப் போற மனுச மனசு, ஏதாவது ஒரு பிராணி கெடச்சாலும் ஓடிப் போயி ஒட்டிக்கிருது. பூலித்தேவன் மேல பாசமாகிப்போன கருவாச்சி அது நேந்துவிட்ட கெடாங்கிற நெனப்பழிஞ்சு போனா.

யம்மா கருவாச்சி! காளியாத்தாளுக்கு நேந்துவிட்ட கெடாங்கிற. காலா காலத்துல வெட்னாத்தானத்தா காளியாத்தாளுக்கும் சந்தோஷம்; கறிதிங்கிற ஆளுக்கும் சந்தோஷம். ஒன்றரையிலேந்து ரெண்டரை வயசுதான் கெடாவெட்டுற பதம். கறி தீங்கறியாயிருக்கும். என்னப்போல பல்லுப் போன ஆளுகளுக்கும் தின்னுக்கிறலாம் ரெண்டு துண்டு. ரெண்டரை வயசுக்கு மேல போச்சுன்னு வச்சுக்க வெளங்காது கறி. சவசவன்னு ஆகிப் போகும்.

பல்லில்லாதவன் ரப்பர் செருப்ப வேகவச்சுத் திங்கிறமாதிரி ஆகிப்போகும் கறி திங்கிறவன் கதை. கெடா பெருங்கெடா, முத்திப்போறதுக்குள்ள வெட்டிப்புடு தாயி பங்குனிப் பொங்கலுக்கு.



உருமாப் பெருமாத்தேவரு சொல்லிட்டுப்போன சொல்லக் கேட்டதும் [illegible] ஒறக்கம் வரல கருவாச்சிக்கு.

ஊத்தெடுத்து ஒழுகுது கண்ணீரு. நெசந்தான்; இத நான் ஆடா வளத்திருந்தா பலி கொடுத்திருப்பேன். பிள்ளையாவில்ல வளத்திருக்கேன். [illegible] அழகுசிங்கத்த இடுப் புல வச்சு பூலித்தேவனக் கையில புடிச்சுக் கருவாச்சி நடந்துட்டா காளியம்மன் கோயிலுக்கு சாமிகூடச் சண்டை புடிக்க.

ஆத்தா! காளியாத்தா! நெஞ்சில வஞ்சகமில்ல; கண்ணுல கபடமில்ல. ஒங்கிட்ட ஒப்பிக்க வந்திருக்கேன்; கேட்டுக்க, ஒனக்குக் கெடா வெட்டுறேன்னு நான் நேந்துக்கிட்டது நெசந்தான். இந்தாடியாத்தா வளத்து வெட்டிக்கன்னு கெடாக்குட்டி குடுத்தவளும் நீதான். ஒம்மேல சத்தியமாச் சொல்றேன்; கெடாவ ஒனக்குத்தான் வளத்தேன். அதுக்குப் புல்லு வச்சதும் ஒனக்காகத்தான்; புளிச்சதண்ணி வச்சதும் ஒனக்காகத்தான். போகப் போக எனக்குப் புத்தி மாறிப்போச்சு. புல்லுத் திங்க வந்தது புள்ளையாப் போச்சு. ஆடா வந்தது ஆளாப்போச்சு; கைவளப்பு வளத்தேன்; காலுக்குள்ளயே கெடக்கு. ஏங்கூட அது பேசுது; அதுகூட நான் பேசுறேன். என் சிணுக்குப் புடிச்ச சீலவாசன அதுக்குப் புடிச்சுப்போச்சு. அந்த மேல் குளியாத தோல்வாசம் எனக்குப் புடிச்சுப்போச்சு. இப்ப எப்பிடி வெட்றது?

இந்தா.... முழுச்சு முழுச்சு மூக்கொழிகி நிக்கிறானே நான் பெத்த பிள்ள.... இவன் பெறப்புக்குத்தான் ஆடு வெட்டறதா நேந்துக்கிட்டேன்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-38

# சேதன விவசாயம் எங்களூரில் சாத்தியமானதே!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வடபகுதி விவசாயத்தின் எதிர்காலம் என்பது வருங்காலத்து தேவைகளை உள்ளடக்கியதுடன் உணவுற்பத்தி என்னும் கருப்பொருளுடன் மட்டும் வரையறுக்கப்படாது அதற்கும் மேலாக உணவினூடான நுண்ணூட்டச்சத்து மற்றும் நிறையுணவு என்பனவற்றுடன் வெளிநாட்டு சந்தைக்கான பொருட்களை உருவாக்குவதனையும் சேர்த்து உள்வாங்கப்பட்டிருக்கின்றது.



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XXV

இது ஒரு பக்கமிருக்க மறுபக்கத்தில் இங்கிருந்து உற்பத்தியாகும் உணவுப் பொருட்கள் எமது தேவையை பூர்த்தி செய்து மீதமானவை வெளிநாட்டு சந்தைக்கு கொண்டு செல்லப்படும் போது நாம் எதிர்பார்க்கும் சந்தைவாய்ப்பும் கிடைக்க வழியுண்டு. வடபகுதிக்கான வெளிநாட்டு சந்தைவாய்ப்பு என்பது எமக்கு கிடைக்கக்கூடிய வரப்பிரசாதமாகவே கருதலாம். எங்களூர் உற்பத்திப்பொருட்கள் ஐரோப்பா, அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ் என எம்மவர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை சென்றடையும் போது முழுமையான சந்தைவாய்ப்பு என்பது நிர்ணயஞ்செய்யப்படும்.

**சேதனபொருட்களை தர நிர்ணயஞ் செய்யும் நிறுவனத்தின் அவசியம்.**

வெளிநாட்டு சந்தை வாய்ப்பெனும் போது உற்பத்தியாகும் உணவுப்பொருட்கள் எதுவானாலும் சேதனமுறையில் உருவாக வேண்டும். மேலும் சேதன முறையில் உருவாக்கப்பட்டது என்பதனை நிர்ணயஞ் செய்வதற்கான ஆய்வுகூடத்துடன் இணைந்த நிறுவனம் ஒன்றினது தேவையும் வடபுலத்தில் வலிந்துரைக்கப் பட்டிருக்கின்றது.

இலங்கையில் ஸ்ரீலங்கா தரநிர்ணயம் செய்யும் அரச நிறுவனம் இதற்காக அமைந்திருந்தாலும் அது கொழும்பில் அமைந்திருப்பதனால் வடபகுதி மக்களுக்கு இதனது சேவையைப் பெற்றுக் கொள்வதில் பல இடர்களிருக்கின்றன. இந்த இடரினை தவிர்த்துக்கொள்ள வடபகுதியில் சேதன முறையிலான தரநிர்ணயஞ் செய்யும் ஆய்வு நிறுவனமொன்றினை அமைக்க வேண்டிய தேவை அனைவரினாலும் உணரப்பட்டுள்ளது.

வடபகுதியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தை நிர்ணயஞ்செய்து அவற்றை தரமான பொருட்களாக சந்தைப்படுத்த, அவற்றிற்கான தரநிர்ணய சான்றிதழை வழங்கும் நிறுவனத்தின் தேவையை பூர்த்திசெய்ய வேண்டும். குறிப்பாக வெளிநாடுகளுக்கு எம்மவர் பொருட்கள் மதிப்பேற்றஞ்செய்து ஏற்றுமதி செய்வதற்கு இத்தரநிர்ணய சான்றிதழ் அவசியம் தேவையானதாகும்.

இந்நிலையில் தென்பகுதியில் உள்ளது போன்று வடபகுதியிலும் இவ்வாறான நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டால் எங்களூர் விவசாயிகளுக்கு இங்குள்ள சிறுதொழில் முனைவோருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். அத்துடன் இங்குள்ள பொருட்களையும் சிறந்த தரமானதாக வெளிநாட்டு சந்தையில் கொண்டுசெல்ல முடியும்.

**சேதனவிவசாயம் சாத்தியமாகும் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு!**

சேதன விவசாயத்தை முழுமையாக செய்கின்ற பூட்டான் என்னும் நாடும் 60 சதவிகிதம் சேதன விவசாயத்திலேயே பயிர்ச்செய்கையிலீடுபடும் கியூபா நாடும் இதற்கு முன்னுதாரணங்கள்.

சேதன விவசாயத்தைப் பற்றி இப்போது இவ்வளவிற்கு பேசுவதற்கு என்ன காரணமென நீங்களே அனுமானிக்க முடியும். அண்மையில் கிடைத்த தகவலின் படி புற்றுநோயாளர்களை அதிகமாக கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் திகழ்வதே இதற்கு காரணமாகும்.

விவசாய செய்கையில் பயன்படுத்தப்படும் நச்சு இரசாயன பதார்த்தங்கள் எமது உடலில் செறிந்து காணப்படுவதே இதற்கு காரணமென கூறலாம். இவ்வாறான நச்சு பதார்த்தங்களின் பாவனையை முதலில் குறைத்து பின்னர் அடியோடு இல்லாமல் செய்வதே சேதன விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான முழுக்காரணமாகும். எமது மக்கள் அனைத்து பகுதிகளினாலும் நச்சு பதார்த்தங்களை நுகர ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் காலங்காலமாக நாம் எம்மையறியாமலேயே உட்கொள்ளும் இந்த நச்சு பதார்த்தங்களை இனியும் தொடர்ந்து உட்கொள்ளாமல் அவற்றை தவிர்ப்பதற்கான வழிமுறைகளையே நாம் நாட முயற்சிக்கின்றோம்.



பரம்பரையலகு பரிமாற்ற பயிரினங்களின் அவசியமின்றி 300 மடங்கு வரை பயிர்விளைச்சலைப் பெறமுடியுமென அவுஸ்திரேலிய நாட்டில் நடைபெற்ற ஆய்வொன்று தெரிவிக்கின்றது. பரம்பரையலகு பரிமாற்ற தொழில்நுட்பத்தின் அனுசரணை உணவை அதிகளவில் உற்பத்தி செய்ய தேவைப்படுகின்ற நிலையில் தற்போது வெளிவந்துள்ள இந்த ஆய்வின் முடிவு எமது பிரதேசத்திற்கு நல்லதொரு செய்தியாக இருப்பதை அறியலாம். தினமும் உண்ணுகின்ற உணவில் சிறிதளவேனும் அசேதன இரசாயனத்தின் கலப்பு இருப்பதனால் எம்மையறியாமலேயே நாம் எமது உடலில் கொழுப்பில் கரையக்கூடிய இவ்வாறான நச்சுப் பதார்தங்களை சேர்த்துக்கொண்டிருக்கின்றோம்.

எமது உடலினுள் உள்ள இனப்பெருக்க உறுப்புக்களின் மேல் படிந்திருக்கும் அதிகமான கொழுப்புடல்களிலேயே இவ்வாறான நச்சுப்பதார்த்தங்கள் செறிவடைகின்றன என அறியமுடிகின்றது.

இதன் மூலமாக எமது உடலில் சிறிது சிறிதாக நச்சுப்பதார்த்தம் செறிவடைந்து இறுதியில் எமக்கு எமனாகவே மாறிவிடுகின்றது. இதனை எமது அலட்சியத்தினால் இன்னும் எமது செய்கையினால் வருகின்ற விளைவாகவே காணலாம்.

புற்று நோயென்பது மனிதனை சிறிது சிறிதாக கொல்லுகின்ற நோயாகும்.

நாம் விளைவிக் கின்ற பயிர்களுக்கு இடப்படும் அசேதன பசளைகளாயினும் சரி பீடைகளைக்கட்டுப்படுத்த பயன்படும் பீடைநாசினிகளாயினும் சரி இவற்றினால் ஏற்படுத்தப்படும் தாக்கம் பாரதூரமானது. இதனை நாம் முன்னுணர் ந்து இயலுமானவரை தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடு படல் நல்லது.

மேலும் தினமும் இரசாயனம் அதிகமான தெளிக்காத பயிருணவுகளை உட்கொள்வதனாலும் நாம் இந்த நஞ்சாக்கத்திலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ளலாம்.

வடமாகாணத்தில் வாழும் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக பயிர்களுக்கு தெளிக்கப்படும் இவ்வாறான பீடைநாசினிகளை குறைப்பதன் மூலமும் அவற்றை 14 நாட்கள் தெளித்தபின் அறுவடை செய்யவும் நாம் முனைந்தால் இப்பிரச்சினைக்கு ஓரளவு தீர்வினைக் காணமுடியும்.

சேதன முறையிலான பயிருற்பத்திக்கு நாம் முழுமையான ஆதரவினை நல்கினால் அதன் மூலம் விவசாய பெருமக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தி விவசாயிகளை சேதனமுறையிலான பொருட்களை பயன்படுத்த சிபார்சு செய்யலாம்.

அசேதன முறையிலான பயிர்ச்செய்கையில் விரைவான முடிவுகளை பெறக்கூடியதாக இருந்தாலும் சேதனமுறைமூலம் உற்பத்தி செய்யப்படும் பயிருணவில் நஞ்ச ற்றதாக இருப்பதனால் மக்கள் தற்போது சேதன முறை மூல மான உணவை உற்பத்தி செய்ய விருப்பம் தெரிவித்ததும் இதற் கான நல்ல சமிக்ஞை.

ஏற்கனவே நஞ்சுடையதாக மாற்றப்பட்டுள்ள எமது உற்பத்தி பிரதேசங்களை சிறிது சிறிதாக நஞ்சற்றதாக மாற்ற அனைவரும் சேர்ந்து முயற்சி செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறில்லாத அரசியல் பயணத்தை ஆரம்பிக்க மகிந்தவுக்கு வாய்ப்பு

## விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)


**கடந்த அரசாங்கத்தில் காண ப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் தவறில்லாத அரசியல் பயணத்தை ஆரம்பிக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

இதனை எழுச்சி பெற்ற மக்கள் வழங்கிய வரமாக கருத வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாய் நாடு ஆபத்தில் மகிந்தவுடன் நாட்டை வெற்றி பெற செய்வோம் என்ற தெனிப் பொருளில் இரத்தினபுரி சீவலி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் நியாயமான விமர்சனங்களை ஏற்றுக் கொள்ள அரசியல்வாதிகள் எப்போதும் தயாராக இருக்கின்றனர்.



இந்த விமர்சனங்களின் அடிப்படையில், தவறுகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மீண்டும் வெற்றிகரமான பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவா தெரிவித்தார்.

அதேவேளை இந்த கூட்டத்தில் உரையாற்றிய மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வர ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த போராட்டத்தை எந்தவிதத்திலும் கைவிடப்போவதில்லை என கூறியுள்ளர்.

இதனிடையே இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த கட்சியின் பொருளாளர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

எனினும் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை .சேர்ந்த 27 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டபோதும் மண்ணெண்ணெய் இதுவரை வழங்கப்படவில்லை

வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் மின்சார வசதிகளற்ற குடும்பங்களுக்கு சுமார் 2 வருடங்களுக்கு மேல் சமுர்த்தி மண்ணெண்ணெய் முத்திரை வழங்கபட்ட நிலையில் இதுவரை மண்ணெண்ணெய் வழங்கபடவில்லையென பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதேவேளை சங்கக் கிளைகளில் தொடர்பு கொண்டு கேட்டால் தமக்கு இன்னும் அறிவித்தல் கிடைக்கவில்லை எனக்கூறும் அதேவேளை பண த்திறகுத் தேவையான மண்ணெண்ணெய் வழங்கப்ப டுகிறது.

எனவே இம்மின்சார வசதி அற்ற குடும்பங்களின் மண்ணெண்ணெயை காலம் தாழ்த்தாது வழங்க உரியவர் கள் முன்வருவார்களா என பயனாளிகள் கேள்வியெழுப்பியுள்ளனர். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 40 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 | 90-100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 60 | 60 | 50 | 40 |
| தக்காளி | 80 | 70 | 60 | 60 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 80 | 30 | 40 | 50 | 40 | 40 |
| கரட் | 180 | 100 | 110 | 120 | 100-120 | 100 |
| பூசணி | 60 | 50 | 60 | 50 | 50 | 50 |
| புடோல் | 40 | 40 | 50 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 60-90 | 80 | 50-70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 80 | 80 | 100 | 80 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 | 80 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 60 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 90 | 80 | 60 | 60 | 60-80 | 60 |
| லீக்ஸ் | 200 | 140 | 140 | 180 | 130-150 | 150 |
| பீற்றூட் | 40 | 40 | 80 | 80 | 50 | 40 |
| கறிமிளகாய் | 200 | 120 | 130 | 80 | 100-120 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 320 | 400 | 200 | 350 |
| போஞ்சி | 200 | 100 | 150 | 120 | 100-110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 30 | 40 | — | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 | 30-40 | 20 |
| தேசிக்காய் | 60 | 120 | 80 | 40 | 80-100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-70 | 50 | 50-60 | 40-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 140 | 100 | 100 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 140 | — | 160 | — | 80 |
| முள்ளங்கி | 30 | 20 | 40 | 80 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 30 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 10 | 20 |




இலக்கியா நகுலன்




ருக்சி சிவகுமார்





நிரோஜன் கிங்





பிரவின் தாஸ்




மயூரதன் மயூரன்




தர்சன் கவிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறக்கும் பொதுத் தேர்தல் களம்



ஆட்சியதிகாரத்தை தீர்மானிக்கும் தேர்தல் சதுரங்கத்தின் மற்றொரு ஆட்டத்துக்கான களம் பொதுத் தேர்தல் எனும் வடிவில் மெல்லத் திறக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து சில மாதங்கள் மாத்திரமே கடந்துள்ள நிலையில், மற்றொரு பிரதான தேர்தலை மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன தேசிய அரசாங்கமொன்றை அமைத்தார். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக தேசிய அரசாங்கம், 100 நாட்கள் கொண்ட செயற்றிட்டமொன்றையும் முன்மொழிந்தது. அந்த செயற்றிட்டம் நிறைவுற்றதும் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்வதற்கான அறிவித்தலையும் ஏற்கனவே விடுத்திருந்தது.

ஆனால், தேசிய அரசாங்கம் முன்மொழிந்த 100 நாட்கள் செயற்றிட்டத்தை குறித்த நாட்களுக்குள் முடிப்பதற்கான சாத்தியப்பாடுகள் இப்போதைக்கு இல்லை. இந்த நிலையில், நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்குள்ளேயே மாற்றுக் கருத்துக்கள் எழுந்துள்ளன. ஆனாலும், தேசிய அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, நாடாளுமன்றம் வரும் ஏப்ரல் 24 ஆம் திகதி கலைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது. அதனை நோக்கிய நகர்வுகளையும் கச்சிதமாக முன்னெடுக்கின்றது.

தேசிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தன்னுடைய பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான அழுத்தங்களை ஆரம்பத்தில் எதிர்கொண்டாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரானதும் அதற்கான சிக்கல்கள் நீங்கின. ஆனால், நீங்கிய சிக்கல்கள் புதிய வடிவில் எழுந்தன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது எனும் விடயத்தை தேர்தல் முறை மாற்றத்தோடு சம்பந்தப்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழுத்தங்களை வழங்க ஆரம்பித்தது. ஆனாலும், ஓரளவுக்கு அவற்றை தன் சார்பில் கையாண்டு (குறைபாடுள்ள) 19 ஆவது திருத்த சட்டமூலத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை தேசிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

100 நாட்கள் செயற்றிட்டத்தில் முக்கிய விடயமாக கொள்ளப்பட்ட 19 ஆவது திருத்த சட்டத்தினை நிறைவேற்றியதும், நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. ஆக, ஏப்ரல் 24 ஆம் திகதி இல்லையென்றாலும், அடுத்துவரும் ஒன்றிரண்டு மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று நடத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் பல தரப்புக்களோடு இணைந்து அமைத்த வியூகத்தினூடாக வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி, பொதுத் தேர்தலை பெரும் ஆர்ப்பரிப்போடு எதிர்கொள்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த தருணத்திலிருந்தே அதற்கான ஆயத்தங்களில் அந்தக் கட்சி ஈடுபடுகின்றது. கடந்த காலங்களில் அந்தக் கட்சிக்குள் காணப்பட்ட தலைமைத்துவத்துக்கான பிரச்சினைகள் இப்போது இல்லை. ரணில் விக்ரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் ஒரே அணியில் கட்சியின் வெற்றி தொடர்பில் சிந்தித்து ஒன்றிணைந்து விட்டார்கள். மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்தியாகிவிட்டது, இனி மற்றவர்களை இலகுவாக கையாளலாம் என்கிற எண்ணம் அவர்களை இன்னமும் உற்சாகம் கொள்ள வைத்திருக்கின்றது.

பொதுத் தேர்தலின் பின்னரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தேசிய அரசாங்கமொன்று இரண்டு வருடங்களுக்கு பதவியிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்த தேசிய அரசாங்கத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் இருப்பதையே விரும்புகின்றது. அதுதான். அடுத்து வரப்போகும் ஐந்து, ஆறு வருடங்களுக்கான ஆட்சியதிகாரத்தை தீர்மானிக்கும் வல்லமைகொண்டது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவது தொடர்பில் அக்கறை கொண்டு செயற்பட்ட ரணில் விக்ரமசிங்க, பொதுத் தேர்தலில் சிங்கள மக்களிடம் அதிக வாக்குகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் அதிக கரிசனையோடு இருக்கின்றார். எந்தவொரு தருணத்திலும் சிங்கள பௌத்த தேசியவாதிகள் ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்தி கொண்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் தேசிய அரசாங்கம் முன்னெடுக்கும் விடயங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரங்களை கொண்டே செய்விக்கின்றார். எந்தவொரு தருணத்திலும் தமிழ் மக்களின் சிறிய பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயமும், பௌத்த தேசியவாதிகளை கோபப்படுத்தி, தேர்தல் வெற்றிகளை கேள்விக்குள்ளாக்கி விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அண்மைக்காலங்களில் எழுந்துள்ள பிரச்சினையும் அதன்போக்கிலேயே கையாளப்படுகின்றது. ரணில் விக்ரமசிங்க தன்மீது சேற்றை வாரியிறைத்தவர்களையே தன்னுடைய நலனுக்கான சேர்த்துக் கொள்பவர். அதிகாரத்தினை அடையும் வழிமுறைகள் மாத்திரமே அவரின் இலக்கு. ஆனால், தன்னை நோக்கி வடக்கு மாகாண முதலமைச்சர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சிங்கள பௌத்த தேசியவாதிகளின் மனங்களை வெல்லும் முகமான சதுரங்க ஆட்டத்துக்காக பயன்படுத்துகின்றார். சி.வி.விக்னேஸ்வரனை "மகா பொய்யர்" என்று இந்தியத் தொலைக்காட்சியொன்றிலேயே பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுமக்களின் காணி மீளக்கையளிப்பு நிகழ்விலும் சி.வி.விக்னேஸ்வரனை எதிர்கொள்ளவதை தவிர்த்துக்கொண்டு தன்னுடைய கோபம் உண்மையானது போன்ற தோற்றப்பாட்டை ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தினார். அதை நிரூபிக்கும் வகையில் சி.வி.விக்னேஸ்வரனும் நடந்து கொண்டார். அவர்கள் இருவரும் முகத்தை திரும்பிக்கொண்ட விடயம் முள்பள்ளி மாணவர்களின் கோபம் போல இருந்தாலும், ரணில் விக்ரமசிங்கவின் அந்த நடத்தை என்பது மிகவும் கச்சிதமாக கட்டமைக்கப்பட்டிருக்கின்றதோ என்று நாம் நம்ம வேண்டியிருக்கின்றது. எதுவும் அறியாமல், சி.வி.விக்னேஸ்வரன் பலிகடாவாகியிருக்கின்றார்.

ரணில் விக்ரமசிங்க தன்னுடைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பெரும் திட்டமிடல்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் தலைமை வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எப்படிக் கட்டுக்குள் கொண்டு வருவது என்பது தொடர்பில் யோசித்துக் கொண்டிருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து கட்சித் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்டதும் கட்சியின் முக்கியஸ்தர்களை இலகுவாக கையாளலாம் என்று எதிர்பார்த்த மைத்திரிபால சிறிசேனவுக்கு அது அவ்வளவு இலகுவாக சாத்தியமாகவில்லை. மாறாக, அவருக்கு அடங்கா குதிரைகளின் ஆட்டம் பெருவளவில் அதிகரித்திருக்கின்றது. அத்தோடு, இன்னமும் மஹிந்த ராஜபக்ஷ அபிமானிகள் கட்சிக்குள் இருப்பது அவரை தன்னுடைய திட்டங்கள் நோக்கி நகர்த்துவதற்கு தடையாக இருக்கின்றது. அதனை, கட்சியின் முக்கியஸ்தர்களுக்கிடையிலான அண்மைய கூட்டமொன்றிலேயே அவர் வெளிப்படையாக அறிவித்திருக்கின்றார்.

"கட்சித் தலைமைப் பதவியை எனக்கு வழங்கியிருக்கிறீர்கள் என்றால், என்னை செயற்படுவதற்கு அனுமதியுங்கள்" என்பது மாதிரியான விரக்தி வெளிப்பாட்டுடான கோரிக்கை அது. அதனை, சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை நோக்கி விடுத்ததாகவே கொள்ள முடியும். எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை கையாள்வது தொடர்பில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மேற்கொண்ட நடவடிக்கையானது ஓரளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றது.

அதனை, தேசிய அரசாங்கத்துக்குள் சுதந்திரக் கட்சியையும் முழுமையாக (?) இணைத்துக் கொண்டதினூடு சாத்தியமாக்கியிருக்கின்றார். எனினும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சியை முழுமையாக தன்னுடைய தலைமையின் கீழ் ஒருங்கிணைப்பது தொடர்பில் அவர் இன்னமும் சிக்கல்களை எதிர்கொள்கின்றார். அதனை விட இன்னொரு பெரும் சிக்கல் அவரைப் பின்தொடர்கின்றது.

அது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தேர்தல் அரசியல் களத்துக்குள் பிரவேசிப்பது தொடர்பிலான விடயம். சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியே தன்னுடைய தேர்தல் அரசியல் பிரவேசம் மீண்டும் அமையும் என்று வெளிப்படையாக மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றார். இந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஷவையும், அவர் சார்பானவர்களையும் எப்படி கையாள்வது என்பது தொடர்பிலான சிக்கலும் நீள்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் திட்டங்களை முறியடிப்பது தொடர்பில் இன்னொரு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் ஒத்துழைப்புடன் மைத்திரிபால சிறிசேன செயற்பட்டாலும், அவர், சந்திரிக்கா குமாரதுங்க தொடர்பிலும் அதிகளவான பயத்தினைக் கொண்டிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் அதனை அவர் தனக்கு நெருக்கமானவர்களிடம் வெளிப்படையாகவே வெளியிட்டிருக்கின்றார். "சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷக்களிடமிருந்து மீட்டெடுத்து பண்டாரநாயக்கக்களிடம் வழங்குதல்" என்ற கோசத்தை தேர்தல் காலத்தில் மைத்திரிபால சிறிசேன முன்வைத்தாலும், தேர்தலின் பின்னரான காலத்தில் "சிறிசேன"க்களின் கைகளிலும் சுதந்திரக் கட்சி இருந்தது என்ற வரலாற்றை பதிவு செய்வது தொடர்பில் அவர் விட்டுக் கொடுப்பின்றி செயற்படுகின்றார்.

இன்னொரு மகா சிக்கல் இருக்கின்றது. அது, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஊழல் பெருச்சாளிகளாக இருந்தவர்களை இன்னமும் கட்சிக்குள் வைத்துக் கொண்டு பொதுத் தேர்தலை எதிர்கொண்டால் பாரிய வீழ்ச்சியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்கிற உண்மை. அப்படியான நிலையில், இந்தப் பொதுத் தேர்தலை தன்னுடைய வெற்றிக்கான பிரதான இலக்காகக் கொள்ளாமல் ஊழல் பெருச்சாளிகள் மற்றும் தனக்கு அடங்காமல் இருக்கும் முக்கியஸ்தரகளை வெட்டி வீழ்த்தும் களமாக கையாள மைத்திரிபால சிறிசேன முயற்சிக்கின்றார். அதன் போக்கில்தான், அவரும் நாடாளுமன்றத்தை ஏப்ரல் மாதத்தில் கலைப்பது தொடர்பில் குறிப்பிட்டளவு ஆர்வத்தைக் காட்டுகின்றார்.

பௌத்த சிங்களப் பெரும்பான்மை மக்களின் சிறு கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன எதிர்நோக்கும் சிக்கல்கள் என்பன வேறு மாதிரியானவை. பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட்டால் அது, ஐக்கிய தேசியக் கட்சியை பெரும்பான்மையாக கொண்ட (தேசிய) அரசாங்கமொன்றை அமைக்கும் சூழலினை உருவாக்கும்.

அது, மேற்குநாடுகள் சார்ப்புள்ளதாக இருக்கும் என்பது. இது, ஜாதிக ஹெல உறுமயவுக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் எரிச்சலூட்டக் கூடியது. ஆனால், மக்கள் விடுதலை முன்னணி பொதுத் தேர்தலொன்றின் அவசரத்தை குறிப்பிட்டளவு வலியுறுத்துகின்றது. அது, நாடாளுமன்றத்துக்குள் தன்னுடைய பலத்தினை இன்னும் அதிகப்படுத்திக் கொள்ள உதவும் என்பதன் போக்கிலாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகளும் பொதுத் தேர்தலினை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்கின்றன. தேர்தல் முறை மாற்றம் தங்களுக்கு இழப்புக்களை வழங்கிவிடுமோ என்கிற அச்சம் மாத்திரமே சிறுபான்மைக் கட்சிகள் பலவற்றுக்கு இருந்தது. ஆனால், அதற்கான சூழல் இப்போது இல்லை என்கிற நிலையில், பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகவே இருக்கின்றன.

அதற்கான வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க ஆரம்பித்துவிட்டன. மக்கள் சந்திப்புக்கள், தேர்தல் காரியாலயங்களின் திறப்பு என்று பரபரப்பான தேர்தல் நடவடிக்கைகளை நோக்கி சிறுபான்மைக் கட்சிகள் செயற்பட ஆரம்பித்துவிட்டன. ஜனாதிபதித் தேர்தல் எனும் சதுரங்க ஆட்டம் வழங்கிய களைப்பே மக்களுக்கு இன்னும் நீக்கியிராத நிலையில் இன்னொரு தேர்தலா என்கிற சலிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், மக்களின் சலிப்பை அதிகாரத்துக்காக போட்டியிடுபவர்கள் அவ்வளவுக்கு கருத்தில் கொள்வதில்லை. வாக்குகளை மாத்திரம் வழங்கிவிட்டு நீங்கள் உறக்க நிலைக்கு செல்லுங்கள் எனும் வகையிலான மறைமுக ஆணையை தேர்தல்களினூடு வழங்குகின்றனர். வரப்போகும் பொதுத் தேர்தலையும் அதிகாரத்துக்கான போட்டியாளர்கள் அப்படித்தான் கையாளப் போகின்றார்கள்.

ஆட்சி மாற்றங்கள் சில நல் மாற்றங்களை மாத்திரமே சாத்தியமாக்கியிருக்கின்றன. அந்த நல்மாற்றங்கள் காலப்போக்கில் கரைந்து மீண்டும் சதிராட்டக்காரர்கள் அதிகாரங்களை கையிலெடுக்கும் சூழல் உருவாகாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டியது மக்களின் பெரும் பொறுப்பு. அதை, கவனத்தில் கொண்டு சலிப்பு மனநிலையைத் தாண்டி மக்கள் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது!

**இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இரத்தினபுரி கூட்டத்திற்கு சென்ற

# சு.க.உறுப்பினர்கள் தண்டிக்கப்படுவர்!

## கட்சியின் பொருளாளர் எச்சரிக்கை



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் நோக்கில் இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் தண்டிக்கப்படுவர் என சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி.நாவின்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தால் அவர்களுக்கு எதிராக தண்டனை விதிக்கப்படும்.

இரத்தினபுரி கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருந்தது.

இந்த தீர்மானத்திற்கு உடன்படாது கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர், முதலமைச்சர், நகரசபை உறுப்பினர், பிரதேச சபை உறுப்பினர் அல்லது தொகுதி அமைப்பாளர் எவரேனும் பங்கேற்றிருந்தால், அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.


கட்சித் தலைமை மற்றும் மத்திய செயற்குழுவிற்கு சவால் விடுக்க எவருக்கும் முடியாது. ஒவ்வொருவருக்கும் தேவையான வகையில் ஆட இடமளிக்க முடியாது.

கட்சி என்றால் அதற்கென சில ஒழுக்க விதிகள் உண்டு. கட்சியின் அனைவரும் கட்சி எடுக்கும் தீர்மானத்திற்கு இசைந்து செயற்பட வேண்டும்.

சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தி அரசாங்கமொன்றை அமைக்கவே விரும்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பு ஊடகமொன்று இரத்தினபுரி கூட்டம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே எஸ்.பி. நாவின்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-5)

# விமலின் கட்சி குறித்து தீர்மானிக்கப்படுமாம்

## ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவிப்பு



(கொழும்பு)

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி குறித்து விரைவில் தீர்மானிக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டணி கட்சியான தேசிய சுதந்திர முன்னணியை கூட்டமைப்பில் தொடர்ந்தும் வைத்திருப்பதா? இல்லையா? என்பது குறித்து தீர்மானிக்கப்பட உள்ளது.

எதிர்வரும் நாட்களில் இது குறித்து தீர்மானிக்கப்படும்.

தேசிய சுதந்திர முன்னணி கூட்டமைப்பில் இருந்து கொண்டே, கூட்டமைப்பை அழிக்கும் சூழ்ச்சித் திட்டமொன்றில் ஈடுபட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆவார்.

அவருக்கு சவால் விடுக்க எவரையும் அனுமதிக்க முடியாது.

முன்னர் இருந்த தலைவர்களை ஆட்டுவித்தது போன்று, புதிய ஜனாதிபதியை எவராலும் ஆட்டுவிக்க முடியாது.

யாராவது அப்படி நினைத்தால் அது நகைப்பிற்குரிய விடயமாகிவிடும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குறைபாடுகளை களைந்து வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிப்பது அனைவரினதும் கடமையாகும் என ஜனக பண்டார தென்னக்கோன் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.(இ-5)

# இன்று ஒரு தகவல்

## வாய்ப்புகள்

வாய்ப்புகள் வரட்டும். வந்தால் பார்த்துக்கொள்வோம் என்பது ஒரு மனோபாவம். வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்வது இன்னொரு வகையான மனோபாவம். வாய்ப்புக்கள் வந்தாலும் அதை உணராமல் இருப்பது இன்னொரு மனோபாவம். இதில் ரொம்ப முக்கியமானது என்னவென்று சொல்கிறார்கள் என்றால் இந்த வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்வது என்பது தான். வெற்றியாளர்களுக்கான அடிப்படைக்குணம் இது.

வாய்ப்புக்கள் வருமா? வராதா என்பதை நாம் தீர்மானிக்க முடியாது. ஆனால் வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என்கிற சிந்தனை மிகவும் முக்கியமானது.

வரலாற்றிலும் சரி, புராண இதிகாசங்களிலும் சரி, வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்கிறவர்கள்தான் முன்னேறி இருக்கிறார்கள். இப்பொழுது பாருங்கள் ஒரு விஞ்ஞானஅறிஞருடைய வாழ்க்கையை.

டைனமோ என்கிற மின்விசையை உற்பத்தி செய்யக்கூடிய கருவியை கண்டுபிடித்து உலகப் புகழ்பெற்றவர் மைக்கல் பரடே. ஆனால் சிறிய வயதில் அவருக்கு நிறைய விஞ்ஞானப் புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்கிற ஆசை இருந்தது. ஆனால் அந்தப் புத்தகங்களைப் படிப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. பொருளாதார வசதியில்லை. அதேமாதிரிப் புத்தகங்களைத் தேடிப்போய் எடுத்துக்கொண்டு வருவதற்கான நேரமும் இல்லை.

இப்பொழுது இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த ஆவலை எப்படிப் பூர்த்தி செய்வது. அதற்காக அவர் ஒருவாய்ப்பை உருவாக்கிக் கொண்டார். சின்னவயதில் அவர் என்ன வேலை செய்தார் என்றால் புத்தகம் பயின்ற, பண்ணுகிற ஒரு நிறுவனத்தில் உதவியாளராக வேலை பார்த்தார். அப்படிப் பயின்று செய்வதற்கு புத்தகங்கள் வருமல்லவா. அதில் உள்ள விஞ்ஞான நூல்களை எல்லாம் தேடிப்படிப்பார். தேடிப்பிடித்து அப்படியே அதிலிருந்து குறிப்பு எடுத்துக்கொள்வார். ஆக புத்தகம் படிக்க வாய்ப்பு இல்லாவிட்டாலும் புத்தகம் படிக்கின்ற வாய்ப்பை அவர் உருவாக்கிக்கொண்டார் என்பதுதான் மிகவும் முக்கியம். அதேமாதிரி இன்னொருவருடைய சாமர்த்தியத்தைப் பற்றிப்பாருங்கள்.

அந்தக் காலத்தில் சர்ஹம்பிரிடேவி என்கிற ஒரு அறிவியல் அறிஞர் இருந்தார். பெரும் புகழ்பெற்றவர் அவர். அவர் சொற்பொழிவு எங்கே நடந்தாலும் பரடே என்பவரைஅங்கு பார்க்கலாம். டேவியுடைய உதவியாளராக சேர்ந்தால் நன்றாக இருக்கும் என்பது இவருடைய ஆசை.அந்த வாய்ப்பு எப்படிக்கிடைக்கும். அவராகப் பார்த்து நீ என் உதவியாளராக வா என்று கூப்பிடவா போகிறார். ஆனாலும் அந்த வாய்ப்பை எப்படியாவது உருவாக்கவேண்டும். அதற்கு இவர் என்ன செய்தாரென்றால் அவர் உரையாற்றுகின்ற இடத்திற்கெல்லாம் போய் அவருடைய உரையின் சுருக்கத்தை குறிப்பெடுத்துக்கொண்டே இருந்தார். பின்னர் வீட்டிற்கு வந்து விரிவாக எழுதி அதையே ஒருபுத்தகக் குறிப்புகளாக்கி தொகுத்துக் கையில் வைத்துக்கொண்டார். ஒருநாள் அந்த நோட்டை ஹம்பிரி டேவிக்கு அனுப்பி வைத்தார். அதைப் பார்த்ததும் ஹம்பிரிக்கு ஒரே ஆச்சரியம். நம்முடைய சொற்பொழிவையெல்லாம் ஒரு பிழையில்லாமல் அருமையாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதை அவர் பார்த்தார். இந்த மாதிரி ஆற்றல் உள்ளவர்களை நம்முடைய உதவியாளராக வைத்துக் கொண்டால் ரொம்ப நன்றாக இருக்குமேயென்று சொல்லி ஒரு கடிதம் எழுதினார்.ஹம்பிரிடேவி, நீங்கள் என்னுடைய உதவியாளராக இருக்கமுடியுமா என்று இவரைக் கேட்டார். இவருக்கு ரொம்பமகிழ்ச்சி அதற்காகத்தான் இவ்வளவு ஏற்பாடு. இந்த உந்துசக்திதான் நமக்கு வேண்டும்.

பின்னர் ஹம்பிரிடேவியினுடையகூட்டுறவினால் தலைசிறந்த விஞ்ஞானியாகிவிட்டார். பரடே தமது சொந்த முயற்சியினால் டைனமோ என்ற மின்னுற்பத்தி சாதனத்தைக் கண்டுபிடித்து அவர் உலகப் புகழ்பெற்றார் என்பது உலக வரலாறு.

கம்பருடைய கம்பராமாயணக் காவியத்தில்கூட பாருங்கள். இராவணன் சபைக்கு ஆஞ்சநேயர் போகிறார். ஆனால் அவரை யாருமே அங்கீகரிக்கவில்லை. அவருக்கு இருப்பதற்கு இடம் கூட அவர்கள் கொடுக்கவில்லை. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் எப்படி வாய்ப்பை உருவாக்குகிறார் என்று பாருங்கள். தன்னுடைய வாலையேவளர்ச்சியடைச் செய்து சுருட்டிச்சுருட்டி ஒரு சிம்மாசனம் ஆக்கி உட்கார்ந்துகொண்டார்.

ஆக மற்றவர்கள் நம்மைப் புறக்கணித்தாலும் நாம் ஆற்றலை உருவாக்கிக்கொள்ளவேண்டும் என்பதற்கு இதெல்லாம் ஓர் உதாரணமல்லவா. சிலபேர் வாய்ப்புக்களை உணரவே முடியாமல் போய்விடுவார்கள்.ஒரு வீட்டில் அழைப்பு மணி பழுதாகிவிட்டது. கம்பனிக்குப் போன் பண்ணி வீட்டுக்காரர் அதைப் பழுதுபார்ப்பதற்கு ஓர் ஆள் அனுப்பச் சொன்னார். பலமணிநேரம் ஆகியும் ஆள் வரவேயில்லை. திரும்ப வீட்டுக்காரர் அந்தக் கம்பனிக்கு போன் செய்திருக்கிறார் ஆள் வரவில்லையென்று. ஐயையோ ஆள் வந்தார். வந்து உங்களை அழைப்பதற்காக ஹோலிங் பெல்லை பலமுறை அழுத்தியிருக்கிறார். ஆனால் நீங்கள் தான் வந்து கதவைத் திறக்கவே இல்லையாம் என்றார்கள் அவர்கள்.

ஹோலிங்பெல்தானே ரிப்பேர் ஆகியிருக்கிறது. பின் அதையே அழுத்தினால்எப்படி வருவார்கள். இதுதான் உணராமல் போறது.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் மயூரன் சுகுமாரனின் மனநிலை என்ன?



...மயூரனை ஹோட்டல் ஒன்றில் வைத்து பொலீஸ் கைது செய்தபோது, அவரிடமிருந்து போதைப்பொருள் எதுவும் மீட்கப்படவில்லை. அன்று மாலையே ஆண்ட்ரூ சானைப் போதைப் பொருளோடு பொலீஸ் கைது செய்ய, 'பாலி-9' வழக்கு இருவரையும் இறுகப் பற்றிக்கொள்கிறது.

அண்ணன் பற்றிய நினைவுகளைக் கம்மிய குரலில் பகிர்கிறார் மயூரனின் சகோதரி பிருந்தா...

"எனக்கு அவன் ஒரு நல்ல சகோதரனாக இருந்தான். அவனை நோக்கி வீசப்பட்ட ஒவ்வொரு கேள்வியும் என்னை நோக்கிக் கேட்கப்பட்ட கேள்வியாகவே இருந்தது. அவன் கைதுசெய்யப்பட்ட போது நாங்கள் நிலை குலைந்து போனோம். அப்போது நான் ஒரு கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். படிப்பை அப்படியே கைவிட நேர்ந்தது.

இன்று அவுஸ்திரேலியா அரசு எவ்வளவோ முயன்றும், என் அண்ணன் இன்னும் மரணத்தின் பிடியிலிருந்து விலகவில்லை. அவன் எங்கேயாவது ஓர் இடத்தில் உயிரோடு இருந்தால்கூடப் போதும். ஆனால், அது நிச்சயம் இல்லாமல் இருக்கிறது.

மரண தண்டனை ஒழிக்கப்பட்ட நாட்டிலிருந்து மரண தண்டனை விதிக்கப்படும் அந்நிய நாட்டின் சட்டப் பிடியிலிருந்து என் சகோதரனை மீட்கும் வழி தெரியாமல் தவிக்கிறோம். அவனைச் சுட்டுக் கொல்லும் நாளில் மரணிக்கப் போவது மயூரன் மட்டும் அல்ல... நான், அப்பா சுகுமாரன், அம்மா ராஜினி, தம்பி மைகேல்... என எங்கள் அனைவரின் மனசாட்சியும்தான்.

அன்று நாங்கள் அனைவருமே துயரமான ஒரு வாழ்க்கையினுள் விழப் போகிறோம். இப்போதே நாங்கள் தனித்து வாழ்கிறோம். எங்கள் வீட்டில் நல்ல சாப்பாடு சாப்பிட்டே பல நாட்கள் ஆகின்றன. அந்தக் கறுப்பு நாளுக்குப் பிறகு எங்கள் நிலை என்னவாக இருக்கும் எனக கற்பனைகூட செய்ய முடியவில்லை.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர்கள் ஆறு பேர் கையெழுத்திட்டு, மயூரனையும் ஆண்ட்ரூ சானையும் விடுவிக்குமாறு இந்தோனேஷியா அரசாங்கத்துக்கு வைத்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

அவுஸ்திரேலியா கைதிகளைப் பரிமாறிக்கொள்ளும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருவரையும் மட்டும் ஒப்படைக்குமாறு கேட்டுப் பார்த்தது. அதற்கும் வளைந்து கொடுக்கவில்லை இந்தோனேஷியா.

அடுத்த யோசனையாக, இவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினால் 'பாலி-9' வழக்குக்காகச் செலவிட்ட மொத்த தொகையையும் வட்டியோடு திருப்பித் தருவதாகவும் கூறியது ஆஸ்திரேலியா.

ஐ.நா வின் மனித உரிமைக் கண்காணிப்பகம் உட்பட பல நாட்டு மனித உரிமை அமைப்புகளும் தலைவர்களும், அவர்கள் இருவருக்கும் "மரண தண்டனை விதிக்க வேண்டாம்' என்ற கோரிக்கையை எழுப்பினார்கள்.

ஆனால், "போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக எங்கள் அரசு வழங்கும் தண்டனையை ரத்துசெய்யக் கோரும் பேச்சுக்கு இடமே இல்லை. அது எங்களின் இறையாண்மையில் தலையிடும் செயல்" எனக் கண்டிப்போடு சொல்லிவிட்டார் இந்தோனேஷியா அதிபர் ஜொகோ விடோடோ.

'பாலி-9' வழக்கில் கைதுசெய்யப்பட்டவர்கள் மிக மோசமான குற்றம் புரிந்தவரகள் என்பதை ஒப்புக்கொள்ளும் அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட், அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஏற்க மறுக்கிறார்.

ஏற்கனவே சில பிரச்சினைகளில் இரு நாட்டு உறவுகளும் பாதிக்கப்பட்டிருக்க, இருவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் அந்த நாடுகளின் உறவில் மேலும் விரிசல் விழலாம்.

**10 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் மயூரன் சுகுமாரனின் மனநிலை என்ன?**

"நான் கைதுசெய்யப்படும் வரை, யாருக்கும் நான் எந்த ஒரு சிறு உதவியும் செய்தது இல்லை. மிக மிக சுயநலமாக என்னைப் பற்றி மட்டுமே யோசிக்கக்கூடிய ஒரு மனிதனாக இருந்தேன். வாழ்க்கையின் தேவைகள் என்ன, நோக்கங்கள் என்ன என்பது பற்றி தெரிந்துகொள்ளாமல் ஒரு வாழ்வை வாழ்ந்துவிட்டேன்.

ஆனால், இந்தச் சிறை வாழ்க்கை, எனக்குப் பல விடயங்களைக் கற்றுக் கொடுத்துவிட்டது. இப்போது நான் மனிதர்களைப் பற்றி நிறையவே யோசிக்கிறேன். அவர்களுக்கு என்னால் என்ன உதவி செய்ய முடியுமோ, அதை மட்டும் செய்கிறேன். இப்போது நான் வாழ ஆசைப்படுகிறேன். ஏனென்றால், நான் கைதுசெய்யப்பட்டதிலிருந்து இந்த நிமிடம் வரையிலான என் வாழ்வை நான் அர்த்தம் உள்ளதாக மாற்றியிருக்கிறேன்.

எனக்குத் தெரியாத பல விடயங்களை வாழ்க்கை இப்போது கற்றுக் கொடுத்திருக்கிறது. அவுஸ்திரேலியா மக்களிடமும் இந்தோனேஷியா மக்களிடமும் போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் அனைவரிடமும் நான் மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கிறேன்' என்பதே மயூரன் கடைசியாக உலகத்துக்குச் சொன்ன செய்தி.

அவரால் இனி வெளியுலகைத் தொடர்பு கொள்ள இயலாது. ஏனென்றால், மரண தண்டனையை நிறைவேற்றும் ஜாவா தீவின் நுசகம்பன்கன் சிறை அத்தனை கொடியது.

நுசகம்பன்கன் சிறைக்கு மாற்றப்படும் எந்தக் குற்றவாளிக்கும் 72 மணி நேரத்தில் தண்டனையை நிறைவேற்றி விடுவது தான் இந்தோனேஷியா மரபு. ஆனால், அந்தச் சிறைக்கு மாற்றப்பட்டு பல நாட்கள் ஆகியும் இன்னும் ஆண்ட்ரூ சானுக்கும் மயூரன் சுகுமாரனுக்கும் தண்டனை நிறைவேற்றப்படாமல் இருப்பதை ஒரு நல்லெண்ண சமிக்ஞையாகப் பார்க்கிறார்கள் சிலர்.

அதே சமயம், "இந்தத் தாமதம் மயூரனின் பிறந்த நாளை எதிர்நோக்கியா?' என்பதும் விடை தெரியாத கேள்வி!

காலம், பல தவறுகளைச் சரிசெய்யலாம். ஆனால், கருணை என்பது காலம் கருதி வருவதல்ல. மயூரன், ஆண்ட்ருவின் முடிவு கருணையின் கையிலா... சட்டத்தின் கையிலா என்பதை காலம் தான் முடிவுசெய்யும்!

சிறையில் என்ன செய்கிறார்கள்?

'பாலி-9' வழக்கில் கைதுசெய்யப்பட்ட மயூரன் சுகுமாரனும் ஆண்ட்ரூ சானும் எப்படி இருக்கிறார்கள்?

கைதுசெய்யப்பட்ட சில நாட்களிலேயே புதிய வாழ்வுக்குத் தன்னைத் தயார்படுத்திக்கொண்ட மயூரன், தனக்குள் இருந்த ஓவியத் திறமையை முழுமையாக வெளிப்படுத்தியிருக்கிறார். சிறையில் தான் வரைந்த ஓவியங்களை ஏலம்விட்டு, அதில் வந்த் தொகையை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்துக்குக் கொடுத்தார்.

தனது கடந்தகாலத்தை மறக்கவும், மன அமைதிக்காகவும் மயூரன் நூற்றுக்கணக்கான ஓவியங்களை வரைந்தார். அவற்றில் பல ஓவியங்களில் தன் அம்மா, தங்கை, தம்பி, நண்பன் ஆண்ட்ரூ சான் ஆகியோரோடு தன்னையும் வரைந்திருக்கிறார் மயூரன்.

ஆண்ட்ரூ சான், போதைப் பழக்கத்திலிருந்து தன்னை மீட்டுக்கொண்டு, சிறையில் கிறிஸ்தவ போதகர் ஆகிவிட்டார். தன் காதலியை மணம் முடித்திருக்கும் ஆண்ட்ரூ சான், தன் சுயசரிதையை எழுதியிருக்கிறார்.

அதில், 'என் குடும்பத்தில் நடந்த திருமணங்களுக்கு நான் சென்றது இல்லை. யாராவது இறந்தால், அந்த இறுதிச் சடங்குகளுக்குக்கூட நான் சென்றது இல்லை. என் குடும்பத்தினருடன் நான் ஒருபோதும் நேரம் செலவிட்டது இல்லை. ஆனால், இப்போது இந்த வலிகளையும் வேதனைகளையும் நான் மட்டும் அனுபவிக்கவில்லை, என் குடும்பமும் சேர்ந்து அனுபவிக்கிறது' என எழுதியிருக்கிறார்!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமன் மீதான வான்வழித் தாக்குதலில் கிளர்ச்சிப்படையைச்சேர்ந்த 18பேர் பலி

(சனா)

**ஏமன் தலைநகர் சனா மீது சவுதி அரேபியா கூட்டணி நாடுகள் நேற்று முன்தினம் வான்வழி தாக்குதல் நடத்தியதில் கிளர்ச்சிப் படையைச் சேர்ந்த 18பேர் உயிரிழந்த அதேவேளை 25இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.**

ஏமனில் 1990 முதல் 2012 பெப்ரவரி வரை அலி அப்துல்லா சேலா என்பவர் ஜனாதிபதியாகயிருந்தார். ஷியா பிரிவைச் சேர்ந்த அவருக்கு எதிராக 2011இல் புரட்சி வெடித்தது.

இதைத் தொடர்ந்து சன்னி பிரிவைச் சேர்ந்த மன்சூர் ஹதி, ஏமனின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். அவருக்கு எதிராக ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படையினர் உள்நாட்டுப் போரை தொடங்கினர்.

சில மாதங்களுக்கு முன்னர் தலைநகர் சனாவை. ஹவுத்தி கிளர்ச்சிப் படை கைப்பற்றியது. ஜனாதிபதி மன்சூர் ஹதி துறைமுக நகரான ஏடனுக்கு தப்பிச் சென்று அந்த நகரை ஏமனின் தலைநகராக அறிவித்தார்.

கடந்த வாரம் ஏடன் மீதும் ஹவுத்தி கிளர்ச்சிப் படை தாக்குதலை தொடங்கியது. கிளர்ச்சிப் படை முன்னேறி வரும் நிலையில் ஜனாதிபதி மன்சூர் ஹதி அந்த நகரில் இருந்து வெளியேறி விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை..

சவுதி திடீர் தாக்குதல்

ஏமனுக்கு அருகில் சன்னி முஸ்லிம்கள் ஆதிக்கம் நிறைந்த சவுதி அரேபியா, ஜோர்தான் உள்ளிட்ட நாடுகள் அமைந்துள்ளன. அந்த நாடுகளின் தலைவர்கள் சன்னி பிரிவைச் சேர்ந்த ஏமன் ஜனாதிபதி மன்சூர் ஹதியை ஆதரித்து வருகின்றனர்.

அதேநேரம் ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஈரான் ஆதரவு அளித்து வருகிறது.

இந்தப் பின்னணியில் ஜனாதிபதி மன்சூர் ஹதியின் வேண்டுகோளை ஏற்று ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு எதிராக சவுதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் ஏமனுக்கு எதிராக நேற்று முன்தினம் திடீர் தாக்குதலைத் தொடங்கின.

சவுதி அரேபிய விமானப் படையின் 100 போர் விமானங்கள் தலைநகர் சனாவை குறிவைத்து குண்டுகளை வீசின. இதில் 18 பேர் உயிரிழந்தனர். 25இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

விமான நிலையம் உள்ளிட்ட முக்கிய பகுதிகள் குண்டு வீச்சில் கடும் சேதம் அடைந்துள்ளன. இந்தப் போரில் அமெரிக்கா நேரடியாக ஈடுபடவில்லை. ஆனால் சவுதி அரேபியாவுக்கு பின்னணியில் இருந்து உதவுவதாகக் கூறப்படுகிறது.

சவுதி அரேபியாவின் தாக்குதலுக்கு ஈரான் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதனால் அந்தப் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.(இ-5)



உலகின் மிகக் குள்ளமான மக்கள் ஆபிரிக்காவின் கொங்கோ காடுகளில் வசிப்பதாக தெரியவந்துள்ளது.இவர்கள் பிக்மிகள் என அழைக்கப்படுகின்றனர். கிரேக்க மொழியில் பிக்மெயிஸ் என்றால் முழும் என்று பொருள். கொங்கோவில் குடியேறிய ஸ்பெயின் மக்கள் அங்கு வசித்த குள்ளமான மக்களுக்கு பிக்மெயிஸ் என்ற பொருள்படும் வகையில் பிக்மி என்று பெயர் வைத்து இம்மக்களை அழைத்தனர். பின்னர் அதுவே அவர்களின் இனப் பெயராக மாறியுள்ளது.

## அனைத்து சொத்துக்களையும் தானம் செய்ய அப்பிள் நிறுவன இயக்குநர் டிம் குக் முடிவு!

(கலிபோர்னியா)

உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான அப்பிள் நிறுவனத்தின் இயக்குநர் டிம் குக் தனது அனைத்து சொத்துகளையும் தானம் செய்ய முடிவு செய்துள்ளார்.

தகவல் தொழில்நுட்ப துறையில் இருக்கும் முக்கிய ஜாம்பவான்கள் பலர் ஏற்கனவே தங்களிடம் இருக்கும் அபரிமிதமான சொத்துகளை பொது சேவைக்கு கொடுத்து வருகிறார்கள். முக்கியமாக மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் உரிமையாளர் பில்கேட்ஸ், பேஸ்புக் நிறுவுநர் மார்க், ஆரக்கிள் கார் நிறுவனத்தின் லாரி எல்லிசன், பங்கு சந்தை கில்லாடி வாரன் பப்பட் போன்றவர்கள் ஏற்கனவே மருத்துவம், சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்காக பெரிய அளவில் தங்கள் செல்வத்தை கொடுத்து வருகிறார்கள்.

அப்பிள் நிறுவனத்தின் இயக்குனராக இருக்கும் டிம் குக்கிற்கு மொத்தமாக 785 மில்லியன் டொலர் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளன. தற்போது டிம் குக் 10வயதான உறவுக்கார சிறுவனின் கல்வி செலவுகளை கவனித்து வருகிறார். அந்த பையனின் கல்லூரி படிப்புக்கு பின், அனைத்து சொத்துகளையும் பொது நல னுக்கு கொடுக்க இருப்பதாக இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள நேர்காணலில் குக் தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு தான் டிம் குக் தன்னை ஓரின சேர்க்கையாளர் என அறிவித்ததுடன், மாற்று பாலினத்தவர்கள் மீது நடத்தப்படும் குற்றங்களுக்கு எதிராகவும் தொடர்ந்து பேசி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## ஏமனில் சவுதி தலைமையிலான தாக்குதலை நிறுத்த வேண்டும்

### ரஷ்யா, ஈரான் வலியுறுத்து

(மொஸ்கோ)

ஏமனில் சவுதி அரேபியா தலைமையிலான தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ரஷ்யா மற்றும் ஈரான்நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஏமனில் உள்நாட்டுப் போர் வலுத்து வருகிறது. ஹவுதி என அழைக்கப்படுகிற ஷியா பிரிவு கிளர்ச்சியாளர்கள் அங்கு அரசு படையை எதிர்த்து சண்டையிட்டு வருகின்றனர். ஏமனில் உள்நாட்டுப் போர் உச்சகட்டத்தை எட்டியுள்ளதால், ஜனாதிபதி அபேத்ரப்போ மன்சூர் காதியின் வேண்டுகோளின் பேரில் சவுதி அரேபியா வான் தாக்குதலை தொடங்கியுள்ளது. ஏமன் தலைநகர் சனா மற்றும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் வசமிருக்கும் பகுதிகளில் 100இற்கும் மேற்பட்ட சவுதி அரேபிய போர் விமானங்கள் அதிரடியாக குண்டு மழை பொழிந்தன.

இதில் கிளர்ச்சியாளர்களின் ஏராளமான போர் விமானங்கள் அழிக்கப்பட்டன. எனினும் இந்த தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து உடனடியான தகவல் எதுவும் இல்லை. மேலும் சவுதி அரேபியாவை சேர்ந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் படை வீரர்களும் ஏமனில் குவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. சவுதி அரேபிய படைகளுடன், கட்டார், ஜோர்தான், குவைத், பஹ்ரைன், எகிப்து, மொராக்கோ மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உட்பட 10 நாடுகளின் படைகளும் இந்த தாக்குதலில் ஈடுபட்டு உள்ளன. மேலும் பாகிஸ்தான் மற்றும் சூடான் போன்ற நாடுகளும் இந்த தாக்குதலில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளன. தாக்குதலுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (இ)

## புன்னகையின் அளவு

உலகப் புகழ் பெற்ற மோனா லிசா ஓவியம் பற்றி ஆராய்ச்சி ஒன்றை நடத்திய ஆம்ஸ்டர்டாம் பல்கலைக் கழக விஞ்ஞானிகள், கணனியின் மென்பொருளை பயன்படுத்தி மோனா லிசா புன்னகையை அளவிட்டனர்.

அதில் அதிக பட்சம் மகிழ்ச்சி 83 சதவீதமும், வெறுப்பு 9 சத வீதமும், பயம் 6 சதவீதமும், 2 சத வீத கோபமும் கலந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந்தரத்தீர்வு பெற்றுத்தரப்படும்

## விவசாயத்துறை அமைச்சர் உறுதி

**(கொழும்பு)**

**வடக்கில் வாழும் இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் நிரந் தரத்தீர்வு பெற்றத்தரப்படும் என மத்திய விவசாயத்துறை அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.**

நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் ஊடாக இலங்கை திருநாட்டை கட்டியெழுப்புவதற்கு தமிழ், சிங்கள,முஸ்லிம் இளைஞர் யுவதிகள் வேறுபாடின்றி ஒவ்வொருவரும் முன்வந்து நாட்டிற்கு பெருமை சேர்க்கின்ற வகையில் முழு அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும்.

இதனூடாக இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் வேறுபாடின்றி சுபீட்சத்துடனும் சந்தோசத்துடனும் வாழ வழிசமைக்கும் என்பதுடன் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல்வேறுபட்ட ஆக்க பூர்வமான விடயங்களை மேற் கொண்டு வருகிறார். கைதி களை மிகவிரைவிலே விடுதலை செய் வதற்குரிய அனைத்து நடவடிக் கைகளையும் மேற்கொண்டு வரு கின்றார்.


இதேபோன்று தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்ற அனைத்து துன்பங்களுக்குமான தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு தற்போதைய அரசாங்கமும் ஜனாதிபதியும் முயன்று வருகிறார்கள்.

எனவே கடந்த காலங்களை மறந்து புதியதோர் நாட்டை கட்டி எழுப்ப முழு ஒத்துழைப்பை தர வேண்டும் என்பதுடன் இளையோர் எதிர்நோக்கும் அனைத்து விடயங்களையும் அமைச்சரவையில் எடுத்துக்கூறி பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுத் தருவ தற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன் என்று தெரிவித்தார்.

முற்போக்கு தமிழ்த்தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எஸ்.விஜயகாந்,மாவட்ட அமைப்பாளர் ராஜ்குமார் மற்றும் வன்னி மாவட்ட அமைப்பபாளர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோரும் அக்கட்சியின் இளைஞர்,யுவதிகள் அண்மையில் கொழும்பில் அமைச்சரை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்பது குறிப்பிட த்தக்கது. (இ-5)

# மகிந்த தோற்பார் என்று ஆதாரத்துடன் கூறினேன்

## ரெஜினோல்ட் குரே தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைத் தழுவுவார் என ஆதாரத்துடன் கூறிய போதிலும், அப்போதைய ஜனாதிபதி மகிந்தவும், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் அதனை ஏற்றுக் கொளளவில்லை என சிவில் விமான சேவைகள் அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த தோல்வியடைவார் என நிச்சயமாக தெரிந்திருந்தும் நான் அவருடன் இணைந்திருந்து பிரசாரம் செய்தேன்.

ஏனெனில், கீழ் மட்ட மக்கள் கட்சியை விட்டு வெளியேற வேண்டாம் என என்னிடம் விடுத்த கோரிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் இவ்வாறு செய்தேன்.

கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் குறித்து சில காலங்களாகவே நான் சுட்டிக்காட்டியிருந்தேன்.

எனினும், ஆட்சியாளர்கள் அதனை திருத்திக் கொள்ள எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித் துள்ளார். (இ-5)

# ஆயுள்வேத வைத்திய சேவை இன்று

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் இலவச ஆயுள்வேத வைத்திய சேவைகளும் இன்று சனிக்கிழமை மு.ப 10 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# இலங்கை பணிப்பெண்கள் இருவர் சவுதியில் மரணம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் அஸீர் பிரதேசத்தில் இலங்கை பணிப் பெண்கள் இருவர் மரணமடைந் துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இவ்விருவரில் ஒருவர் விபத்திலும், மற்றவர் எரியூட்டப்பட்ட நிலையிலும் மரணமடைந்துள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் திருகோணமலை உப்புவெளியை வசிப்பிடமாகக் கொண்ட நசுரா என்பவராவார். அவர் ஐந்து பிள்ளைகளின் தாயாருமாவார். இன்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்னரே பணிப் பெண்ணாக் அவர் சவுதிக்கு சென்றுள்ளார்.

தான், பணிப்பெண்ணாக இருந்த எஜமானின் வீட்டு எஜமானி தன்னை தாக்கியதுடன், பல்வேறான துன்புறுத்தல்களுக்கும் உட்படுத்தினார் என்றும், சில நாட்களுக்கு முன்னர் பெற்றோல் அல்லது வேறு ஏதாவது எரிபொருளை ஊற்றி, அறைக்குள் போட்டு பூட்டி எரியூட்டினார் என்றும் அஸீர் வைத்தியசாலையின் ஊழியரிடம் அந்த பணிப்பெண் தெரிவித்துள்ளார்.

அஸீர் வைத்தியசாலைக்கு வெளியே உயிருக்காக துடித்துக் கொண்டிருந்த அப்பெண்ணை, வைத்தியசாலை ஊழியர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்ததாக அந்நாட்டில் இருக்கின்ற இலங்கை சமூக சேவையாளரான நிமல் எடேரமுல்ல தெரிவித்துள்ளார் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸீர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண்களை பார்வையிடுவதற்காக சென்றிருந்த போதே வைத்தியசாலை ஊழியர்கள் மேற் கண்டவாறு தெரிவித்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அந்த பெண், சிகிச்சை பலனளிக்காத நிலையில், கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை மரணமடைந்துள்ளார். அவருடைய சடலம் அஸீர் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது

அந்த பெண் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அரேபிய மொழியில் எழுதப்பட்ட ஆவணமொன்றில் அவருடைய பெருவிரல் அடையாளம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதற்கிடையில் அபா பிரதேசத்திலிருந்து 60 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்ற அரப் மலை பிரதேசத்தில் பணியாற்றிய மற்றொரு இலங்கை பணிப்பெண், எஜமானின் வீட்டிலிருந்து தப்பியோடிய போது விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று ஜேடா கவுன்சிலர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

அவர், இலங்கை பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும், அவர் தொடர்பிலான மேலதிக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என்றும் அந்த காரியாலயம் தெரிவித்துள்ளது.

அப்பெண்ணின் சடலம், ஜிகாத் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



**சுந்தரலிங்கம் பரமலிங்கம்**

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் இல.399, ஆறுமுகம் வீதி வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் பரமலிங்கம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் வட்டக்கச்சி மம்மில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



**திருமதி சிவசெல்வநாதன் மகேஸ்வரி**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடா நோத்யோக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவசெல்வநாதன் மகேஸ்வரி கடந்த 21 அம் திகதி சனிக்கிழமை கனடாவில் காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி மரியப்பிள்ளை நீக்கிலஸ்**

மன்னார் முருங்கன் பிடாரி குளத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா வேப்பங்குளத்தை வசிப்பி மாகவும் கொண்ட மரியப்பிள்ளை நீக்கிலஸ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருவுடல் இன்று சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



**தம்பித்துரை தனபாலசிங்கம்**

(Retired Deputy Director, Census and Statisties Department)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை தனபாலசிங்கம் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் எதிர்வரும் முதலாம் திகதி புதன் கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**முத்துராஜா குணத்திலகம்**

சரவணையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராஜா குணத்திலகம் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை St.Marylebone, Crematorium, East End Road, London,N2ORZ, United kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி பத்மநாதன் வாசுகி**

நவாலியைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து Hertfordshire, Bishops Stortfordஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் வாசுகி கடந்த 23ஆம் திகதி திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் நாளை முற்பகல் 11.30 மணியளவில் Parndon Wood Crematorium, Parndon Wood Road, Harlow Exses CM19 4SF, United Kingdom என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



**திருமதி கணபதிப்பிள்ளை இரத்தினபூபதி**

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு மல்லாவி, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினபூபதி கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.11- பி.ப 01 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற விதத்தில் நடத்தப்பட்டுவரும் பேருந்துச் சேவையை தடுத்து நிறுத்துக!

## முல்லை.தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் கோரிக்கை

(முல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் வலைப்பாடு கிராமத்தில் இருந்து துணுக்காய்-மாங்குளம் ஊடாக வவுனியா வரை பேருந்துசேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இப்பேருந்துசேவையினால் முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் கீழ் துணுக்காயில் இருந்து மாங்குளம் ஊடாக வவுனியாவிற்கு பேருந்து சேவையில் ஈடுபடும் பேருந்து உரிமையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே தமது பிரதேசத்தின் ஊடாக நடைபெறும் வலைப்பாடுக்கான பேருந்து சேவையை நிறுத்தி உதவுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து மீன்பிடி கிராமிய மற்றும் வர்த்தக வாணிபத்துறை அமைச்சின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பிரதிநிதியுமான து.ரவிகரனிடம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்குமிடையில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போதே மேற்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது. இக்கோரிக்கை தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் பேருந்து சேவையில் ஈடுபடும் உரிமையாளர்களாகிய நாம், வன்னி இறுதியுத்தத்தின்போது பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தோம்.

இந்நிலையில் வங்கிகளில் இருந்து குத்தகை அடிப்படையில் (லீசிங்) 40 பேருந்துகளை கொள்வனவு செய்து சேவையில் ஈடுபட்டிருந்தோம்.

வங்கிகளில் தவணைப்பணம் செலுத்த முடியாமல் போனமையையடுத்து அப்பேருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் வலைப்பாடு கிராமத்தில் இருந்து ஜெயபுரம், அக்கராயன், திருமுறிகண்டி ஊடாக வவுனியா செல்லவேண்டிய வழித்தடத்திற்குரிய பேருந்துகள் எமது சேவையைக் குழப்பும் நோக்கில் அத்துமீறிய சேவையாக வலைப்பாடில் இருந்து துணுக்காய், மாங்குளம் ஊடாக வவுனியாவுக்கு பேருந்துகள் தினசரி காலை சென்று மாலை திரும்புகின்றன.

இதனால் துணுக்காயிலிருந்து வவுனியாவிற்குப் புறப்படும் எமது அதிகாலை 6.30 மணி சேவை பாதிப்படைகின்றது.

எனவே கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் முறையற்ற விதத்தில் எமது மாவட்டத்தினூடாக நடத்தப்படும் வலைப்பாடிலிருந்து வவுனியா சேவையை தடுத்து நிறுத்தி கிளிநொச்சி மாவட்டத்தின் ஊடாக அவர்களது பேருந்து பணியைத்தொடர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு பதிலளித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.டெனீஸ்வரனுக்கு அறிவித்து நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதிமொழி வழங்கினார். (2-15)

# செட்டிகுளம் மகாவித்தியாலயத்திற்கு வடமாகாண கல்வி அமைச்சர் விஜயம்



வவுனியா செட்டிகுளம் மகாவித்தியாலயத்திற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டார்.

பாடசாலையில் 100 வருடத்திற்கு மேலான ஒல்லாந்தர் காலக் கட்டடம் ஒன்றின் பழைமையைப் பேணும் வகையிலும் அதனைப் புனரமைக்கும் நோக்குடனும் இந்த விஜயம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது அமைச்சர் பாடசாலையின் கல்வி நிலை, பௌதீக வள அபிவிருத்தி தொடர்பாக பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

அதேவேளை புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நிறைவடையும் நிலையிலுள்ள தொழில்நுட்ப ஆய்வு கூடம், தொழில்நுட்பபீடம், பாடசாலை சுற்றுப்புறம் ஆகியவற்றையும் அமைச்சர் பார்வையிட்டுள்ளார். (2)

# நெற்பயிர் அழிவிற்கான நட்டஈடு வழங்கப்படவில்லை

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புளியம்பொக்கணை, உருத்திரபுரம் ஆகிய கமநலசேவை நிலையங்களுக்குட்பட்ட வயல் நிலங்களில் 2014-2015 காலபோக நெல் விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பயிரழிவிற்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

மேற்படி கமநலசேவை நிலையங்களில் கடந்த 2014-2015 காலபோக நெல்விதைப்பில் ஈடுபட்டு நெற் பயிரழிவை சந்தித்த விவசாயிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு இது வரை வழங்கப்படவில்லை.

இதேவேளை ஏனைய கமநலசேவை நிலையங்களில் நெற்பயிர் அழிவிற்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது வழங்கப்படாத நிலையில் உள்ள கமநலசேவை நிலையங்களுக்கும் விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட செயலகத்தினாலும் கமநலசேவை திணைக்களத்தினாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது.

இதனை நம்பி நட்டஈடு விரைவில் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தமக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படாத பட்சத்தில் தாம் மாவட்ட செயலகம் நோக்கி போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் இவ்விடயம் சார்ந்த அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து நெற்பயிரழிவு நட்டஈட்டைப் பெற ஆவன செய்யவேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)




# வடிகாலமைப்பு சபை ஊழியர்கள் நேற்றையதினம் பணிப்புறக்கணிப்பு

(குருமன்காடு)

நாடளாவிய ரீதியில் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினர் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அந்தவகையில் வவுனியா மாவட்ட தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்களும் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



தமக்கான சம்பள உயர்வினை வழங்கக் கோரி நேற்றுக்காலை முதல் மதியம் வரை சம்பளப் பிரச்சினையை உடனடியாக தீர், போராடுவோம் போராடுவோம் சம்பள உயர்வுக்காய் போராடுவோம், சம்பளம் உயரும் வரை போராட்டம் தொடரும் ஆகிய வசனங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிப் பிடித்தவாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள் தெரிவிக்கையில்,

எமக்கான சம்பளம் மூன்று வருடத்திற்கு ஒரு தடவையே அதிகரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு அதிகரிக்கப்படும் வீதத்தை தற்போதைய அமைச்சு குறைத்துள்ளது. ஏனைய திணைக்களங்கள், சபைகளுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்ட போதும் எமக் கான சம்பள அதிகரிப்பு கோரிக்கை நடை முறைப்படுத்தப்படவில்லை. இதனால் எமக் கான சம்பள அதிகரிப்பை வழங்குமாறு கோரியே நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பு இன்று (நேற்றைய தினம்) நடைபெறுவதாகவும் அதற்கமைய தாமும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

தற்போது 20 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த சம்பளத்தினை 40 வீதத்தினால் அதிகரிக்க வேண்டுமெனக் கோரியே தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தனர். (2-250)

# துப்பாக்கி சூட்டில் இளைஞன் காயம்

மாங்குளம் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் காலில் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாங்குளம், ஐயன்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டபோது சந்தேகத்திற்கு இடமான இளைஞன் ஒருவனை சோதனையிட்டபோது அவரது பையில் கஞ்சா இருந்துள்ளது.

இதனையடுத்து குறித்த இளைஞனை கைது செய்யமுற்பட்ட போது அவர் தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

இதன்போது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் அவர் காலில் காயமடைந்துள்ளார். இதனையடுத்து குறித்தநபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இச்சம் பவத்தில் புத்தூர், ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த தட் சணாமூர்த்தி தர்தன் (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டோனியை கண்கலங்க வைத்த தோல்வி இணையத்தில் பரவலாகும் புகைப்படம்



உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதியில் அவுஸ்திரேலிய அணியிடம் இந்தியா தோல்வி பெற்றபோது அணித் தலைவர் டோனி கண்கலங்கிய புகைப்படம் பரவலாகியுள்ளது. நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானை வீழ்த்தி வெற்றி நடை போட்ட இந்திய அணி, தொடர்ச்சியாக 7 வெற்றிகளை குவித்து தள்ளியது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் சிட்னியில் நடந்த அரையிறுதியில் இந்தியா, அவுஸ்திரேலியாவிடம் 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இது ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. போட்டி முடிந்த போது இரு அணிகளின் அணித்தலைவர்கள் கருத்தை நிகழ்ச்சி தொகுப்பாளர் கேட்டார்.

அப்போது டோனியின் கருத்தை கேட்க அழைத்தபோது, அவரது கண்கள் கலங்கியிருந்தன. இதை டி.வி.யில் பார்த்த ரசிகர்களும் தங்கள் தொலைபேசிகளில் புகைப்படம் எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டனர்.

அந்த புகைப்படம் தற்போது பரவலாக சுற்றிவருகிறது. கூலான அணித் தலைவர் என்று அழைக்கப்படும் டோனியே கண்கலங்கி விட்டார் என்று ரசிகர்கள் தங்கள் ஆதங்கத்தை கொட்டித் தீர்க்கின்றனர்.

முன்னதாக நியூசிலாந்துக்கு எதிரான, அரையிறுதி போட்டியில் தென்னாப்பிரிக்கா தோற்ற போது, அந்த அணியின் மோர்க்கல், அணித்தலைவர் டிவில்லியர்ஸ் ஆகியோர் அழுதது ம் ரசிகர்களை மிகவும் பாதித்திருந்தது. (க)

## நெடியகாடு இளைஞர் வி.கழக உதைபந்தாட்டம் சென்.அன்ரனீஸ்-யங்கம்பன்ஸ் இன்று பலப்பரீட்சை





நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் Jaffna Challengers Cup கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 7 மணிக்கு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக தலைவர் ஆர்.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். இறுதி போட்டியில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## தோல்வியிலும் சாதனை படைத்துள்ளார் டோனி



உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடன் இந்திய அணி தோல்வி அடைந்தாலும், அணித்தலைவர் டோனி புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார். சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், ஒரு அணித்தலைவராக டோனி 6 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளார்.

இந்த இலக்கை கடந்த மூன்றாவது அணித்தலைவராக டோனி உள்ளனார். டோனி இதுவரை 178 போட்டிகளில் அணித்தலைவராக செயற்பட்டு 6 ஆயிரத்து 22 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இந்த தர வரிசையில் அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் (8 ஆயிரத்து 497 ஓட்டங்கள்), நியூசிலாந்தின் ஸ்டீபன் பிளமிங் (6 ஆயிரத்து 295 ஓட்டங்கள்) ஆகியோர் முன்னிலையில் இருக்கின்றனர்.

ஒட்டுமொத்த ஒருநாள் போட்டியில் டோனி 8 ஆயிரத்து 499 ஓட்டங்களை குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## கோலியின் சொதப்பலுக்கு அனுஷ்காவை திட்டித் தீர்ப்பதா?



அனுஷ்கா சர்மா சிட்னி மைதானத்துக்குப் போனதால்தான், விராட் கோலி சரியாக ஆடவில்லை என்று ரசிகர்கள் அவரை சரமாரியாக திட்டி வருகின்றனர்.

மேலும் அனுஷ்கா சர்மா படங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்றும், அவர் வீடு மீது கல்லெறிய வேண்டும் எனவும் ஒரு கூட்டம் புறப்பட்டது.


இந்நிலையில் கோலி மோசமாக விளையாடியதற்கு அனுஷ்கா சர்மா என்ன செய்வார் என்று அவருக்கு ஆதரவாக இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சவுரவ் கங்குலி பேசியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

அனுஷ்கா, கோலியும் காதலிப்பதில் என்ன தவறு இருக்கிறது. விராட் கோலியின் மோசமான ஆட்டத்துக்கு அனுஷ்கா சர்மாவை குற்றஞ் சாட்டக் கூடாது. அவர் கிரிக்கெட் போட்டியை பார்க்க வீரர்களின் குடும்பத்தினர்கள் செல்வது போல் சென்றுள்ளார். அவர் மீது குற்றஞ் சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியுள்ளார்.

மேலும் இந்திய அணியின் தோல்வி குறித்து அவர் கூறுகையில், உலகக் கிண்ண இந்திய அணியின் செயற்பாடு சிறப்பாக இருந்தது.

### கங்குலி ஆதரவு



ரவீந்திர ஜடேஜா துடுப்பாட்டம், பந்து வீச்சில் ஏதாவது ஒன்றில் ஜொலித்திருக்க வேண்டும். ஆனால் அதை அவர் செய்யவில்லை. அவுஸ்திரேலிய வீரர்கள் மக்ஸ்வெல், மிட்செல் ஜோன்சன் ஓட்டங்களை சேர்க்கிறார்கள். அது போன்ற வீரர்கள் நம்மிடம் இல்லை.

இந்திய அணியில் சில குறைபாடுகள் உள்ளன. அதை களைய என்ன வழி என்பதை ஆராய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (க)

## அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் சம்பியன்



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகளாக காணப்பட்ட போதிலும் முதற்பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தவறுகளை விட்ட நிலையில் சரஸ்வதி மகா வித்தியாலயம் 18:04 புள்ளிகள் என்ற முன்னிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலத்த எதிர் பார்ப்பின் மத்தியில் களம் புகுந்த நிலையில் யூனியன் கல்லூரி உத்வேகத்துடன் விளையாடியமையால் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் சற்று தடுமாறியது.

இந்நிலையில் யூனியன் கல்லூரி 15:09 புள்ளிகள் என்ற முன்னிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 27:19 புள்ளிகள் என்ற நிலையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை வெற்றி பெற்று வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் அனைத்தையும் வென்றுவிடும். எனவே நேரத்திற்கு பணிந்து கடமை புரியுங்கள். - ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## விக்னேஸ்வரன் தலைமையில் புதிய அரசியல் தலைமை தேவை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பொறுப்பேற்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக் கூடிய அனைவரும் தமிழ் இனத்தின் பற்றுறுதி மிக்க விசுவாசிகள் என்றொரு எடுகோள் இருந்தால் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பொறுப்பேற்பது பொருத்துடையது.

ஆனால் தமிழ் இனத்திற்கு இம்மியும் விசுவாசம் இல்லாத- தமது சுயலாபமே முழுவதும் என்ற மனநிலை கொண்டவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருப்பதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை முதல்வர் விக்னேஸ்வரன் பொறுப்பேற்பது பொருத்துடையது அல்ல.

அவ்வாறு பொறுப்பேற்பதன் மூலம் விக்னேஸ்வரனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வழிப்படுத்த முடியும் என்று நினைப்பதும் நடைமுறைக்குச் சாத்தியமன்று.

அதேநேரம் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்கான பொருத்தமான; உத்தமமான ஒரு தலைவர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த அடிப்படையிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலம்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பொறுப்பேற்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் மேற்போந்த கோரிக்கை சுயநலம் அற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலொழுங்கில் உள்ள பிறழ்வுகளின் அவதானிப்பின் அடிப்படையில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இக்கோரிக்கையை காத்திரமான முக்கியத்துவத்தோடு தமிழ் மக்கள் நோக்க வேண்டும்.

ஏனெனில், வட பகுதிக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எங்கள் தமிழர் தாயகத்தின் முதல்வரைச் சந்திக்க மறுத்தார். இந்த மறுதலிப்போடு யாழ் வந்த பிரதமர் ரணிலை, கரம் கூப்பி வரவேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முண்டியடித்தனர் எனில் நாம் எங்கே? போகிறோம் என்பது புரிகிறதல்லவா!

ஆகையால்தான் கஜேந்திரகுமாரின் கருத்துத் தொடர்பில் தமிழ் மக்கள் கருசனை கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றோம்.

அதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை முதல்வர் விக்னேஸ்வரன் பொறுப்பேற்க வேண்டும் என்பதை விட, தமிழர்களுக்கான ஒரு புதிய அரசியல் தலைமையை உருவாக்க நீதியரசர் விக்னேஸ்வரன் முன்வருவதே பொருத்தமும் பெறுமதியுமாக இருக்கும்.

தமிழர்களின் புதிய அரசியல் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக் கூடிய மனம், மொழி, மெய்யால் தமிழ் இனத்தை நேசிப்போர் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட தமிழ்ப் பற்றுறுதி கொண்ட புத்திஜீவிகள் இணைந்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான் தமிழர்களுக்கு விடிவும் உரிமையும் கிடைக்கும். இல்லையேல் தமிழர் அரசை, பிரதமர் ரணில் அவமதித்து செயற்படுவார். அதேவேளை அவரை வரவேற்க கூட்டமைப்பில் ஒரு தரப்பு முண்டியடிக்கும் என்பதே நிலைமையாகி விடும் கவனம்.

## தமிழ்ப் பெண் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை-ரணில்

(யாழ்ப்பாணம்)

சிறையிலுள்ள பெண்கள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களை சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட சந்திப்பு ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதன்போது சிறையில் உள்ள பெண்களை விடுதலை செய்வதற்கு பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பெண்தலைமைத்துவக் குடும்பங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை வேண்டும் என மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்கள் குறித்து மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா அனுப்பி வைத்துள்ள அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறையில் உள்ள பெண்கள் குறித்து வழக்குத் தொடரப் பட்டு விடுதலை செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் பெண் தலைமைத்துவ குடும்பங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும் அவர்களுக்கு சுய தொழில் முயற்சிகளை வழங்க எமது அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

## சிறுமியை கடித்த குரங்கு பாம்பாட்டிகள் கைது

(ஹற்றன்)

ஹற்றன் நகரில் பொது சந்தைக்கு அருகில் நேற்று மதியம் ஒரு மணியளவில் பாடசாலை மாணவியை குரங்கு கடித்த சம்பவம் தொடர்பாக இரண்டு பாம்பாட்டிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாம்பாட்டிகளுடன் இரண்டு குரங்குகள், நான்கு பாம்புகளையும் பொலிஸார் தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

இந்த பாம்பாட்டிகள் ஹற்றன் பொது சந்தைக்கு அருகில் பாம்புகளையும் குரங்குகளையும் பயன்படுத்தி வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தனர்.

அப்போது அதன் அருகில் சென்ற பாடசாலை மாணவியை குரங்கு கடித்துள்ளது.

இது குறித்து ஹற்றன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பாம்பாட்டிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். 11 வயதான சிறுமி டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (11)

## ஞானக்குழந்தை இல்ல பேச்சுத்திறன் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் ஆதரவுடனும் பாலர் கல்விக்கழக நிர்வாகத்துடன் இயங்கும் ஞானக் குழந்தை இல்ல அறநெறி முன்பள்ளி சிறார்களின் பேச்சுத்திறன் காணும் நிகழ்வு இன்றையதினம் பிற்பகல் ஒரு மணியளவில் ஆறுகால்மடம் அறிவொளி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலையத் தலைவர் சி.க.தம்பிராசா கேட்டுக் கொண்டுள்ளார். (4)

## க.பொ.த உயர்தர செயற்றிட்ட மதிப்பீட்டு பதிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சைக்கு முதல் தடவையாக 2015 இல் வெளிவாரிப் பரீட்சார்த்தியாக தோற்ற எதிர்பார்க்கும் 21வயதை விடக் குறைந்த விண்ணப்பதாரர்களை செயற்றிட்ட மதிப்பீட்டிற்காக பதிவு செய்யும் திகதியானது 2015.03.30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (1)

## ஆஸிக்கு ஆட் கடத்தும் குழு தமிழகத்தில் மடக்கிப் பிடிப்பு

(சென்னை)

தமிழகத்தில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை கடத்திச் செல்லும் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் இலங்கைத் தமிழர்கள் மூவர் தமிழகத்தில் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்தின் பல்லாவரம் அருகில் உள்ள பொழிச்சலூர் என்ற இடத்தில் உள்ள வீடு ஒன்றில் இவர்கள் பதுங்கியிருந்த சமயம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 29 வயதான துஸ்யந்தன், 30 வயதான லிங்கேஸ்வரன் மற்றும் 28 வயதான விஜயராஜ் ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

குறித்த சந்தேக நபர்களிடம் பணம் செலுத்தியதாகக் கூறி இலங்கை அகதி ஒருவர் வழங்கிய தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் துஸ்யந்தனும், லிங்கேஸ்வரனும் இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக கடந்த வருடம் இந்தியாவுக்கு சென்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இவர்களிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (11)

## 13இன் பிரிவினை சரத்தை நீக்காது 19ஐ கொண்டுவரவேண்டாம்

### குணதாச அமரசேகர

(கொழும்பு)

13-ம் திருத்தச் சட்டத்தின் பிரிவினைவாத சரத்துக்களை நீக்காது 19-ம் திருத்தச் சட்டத்தை கொண்டு வர வேண்டாம் என தேசப்பற்றுடைய தேசிய அமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

பொரளை றொட்னி பிளேஸில் அமைந்துள்ள தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

13-ம் திருத்தச் சட்டத்தின் பிரிவினைவாத சரத்துக்களை நீக்காமை ஒட்டுமொத்த (சிங்கள) இனத்திற்கும் செய்யும்துரோகமாகவே கருதப்பட வேண்டும்.

13-ம் திருத்தச் சட்டத்தில் காணப்படும் பொலிஸ், காணி அதிகாரங்களை ரத்து செய்தல், இரண்டு மாகாணங்களையும் இணைக்கும் அதிகாரத்தை அகற்றுதல், முதலமைச்சர் மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி வெளிநாட்டு பணத்தை பெற்றுக் கொள்வதற்கான அதிகாரத்தை ரத்து செய்தல் போன்ற பிரிவினைவாத சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும்.

அதன் பின்னர் 19-ம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தினால் அதனை எதிர்க்கப் போவதில்லை என குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். (11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### தெளிவு

**முக்தி அடைந்த பிறகு அல்லது கடவுளை உணர்ந்த பிறகு ஏற்படும் பந்தம்:** உங்களின் சைதன்ய நிலை உயர்ந்து சம்பூரணஜீவன் முக்தி அடைந்தவுடன் அம்மா பகவானின் பந்தமே முடிவானது என்பதை உணருவோம். மேலும் அவர்களே நம் வாழ்வை வழிநடத்திச் செல்கிறார்கள் என்பதை உணரும் போது நம்மைப் பரிபூரணமாக ஆக்கிரமித்து ஸவர்ணய கவசம் அளிக்கிறார்கள்.

நீங்கள் எந்த நிலையில் உள்ளீர்கள் என்பதை உணர்ந்தபிறகு அடுத்த நிலைகளுக்கு அதாவது அவர்களுடன் ஒரு புனிதபந்தம் ஏற்படும் நிலைக்கு எடுத்துச் செல்லப் பிரார்த்தனை செய்யவேண்டும். அம்மா பகவானுடன் ஏற்படும் பந்தமே வாழ்க்கையின் முடிவான குறிக்கோளாகும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



எண்ணற்ற பிறவிகள், சொர்க்கங்கள், நரகங்கள் இவை மூலமாக நாம் கற்றுக்கொள்ளவேண்டியபாடம் இதுதான். வேண்டும் என்று கேட்பதற்கோ, ஆசைப்படுவதற்கோ சொந்த ஆன்மாவைத் தவிர எதுவும் இல்லை.

பற்று வைப்பது, பற்றைவிடுவது இரண்டும் பூரணமாக வளர்க்கப்பட்டால் அவை மனிதனை உயர்ந்தவனாக, மகிழ்ச்சி நிறைந்தவனாக ஆக்குகின்றன.

வைரச்சுரங்கமாகிய நான், நன்மை மற்றும் தீமையாகிய கூழாங்கற்களுடன் விளையாடிக்கொண்டிருக்கிறேன். தீமையே வா, உனக்கு மங்களம் உண்டாகட்டும்; நன்மையே நீயும் வா, உனக்கும் மங்களம் வரட்டும். என் காதுகளுக்கருகில் பிரபஞ்சமே தலைகீழாக வீழ்ந்தாலும் அதனால் எனக்கென்ன? அறிவு கடந்த அமைதியே நான். அறிவு நமக்கு நன்மையையோ தீமையையோ மட்டும்தான் கொடுக்கிறது. நான் அதற்கும் அப்பால் உள்ளேன். நானேஅமைதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளி வர்க்கத்திடம் பணம் பெற்று போராட்டங்களை முன்னெடுக்கவில்லை

## அன்னா ஹசாரே மறுப்பு

**சமூக போராட்டங்கள் நடத்துவதற்கு ஆதரவாக வெளிநாடுகளில் இருந்தும், முதலாளித்துவ வர்க்கத்திடம் இருந்தும் தனக்கு பணம் வரவில்லை என சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே மறுப்பு தெரிவித்துள்ளார்.**



சமூக ஆர்வலரும், காந்தியவாதியுமான அனனா ஹசாரே அரசுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். அவர் போராட்டம் நடத்துவதற்கு அவருக்கு வெளிநாடுகளில் இருந்தும், முதலாளித்துவ வர்க்கத்தினர்களிடமிருந்தும் பணம் வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த குற்றசாட்டுக்கு மறுப்பு தெரிவித்து அணா ஹசாரே வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

போராட்டங்கள் நடத்த வெளிநாடுகளில் இருந்தும், முதலாளித்துவ வர்க்கத்தினர்களிடமிருந்தும் எனக்கு பணம் வருகிறது என்று கூறப்படும் குற்றச்சாட்டை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன்.

வெளிநாடுகளில் இருந்து எங்களது இயக்கம் பணம் பெறுகிறது என்பதை யாராவது நிரூபித்தால், நான் பொதுவாழ்வில் இருந்தே விலகி விடுகிறேன். நான் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்களில் ஒரு பையை வைப்பேன். அதில் ரூ.5 முதல் 15 ரூபாய் வரை, உங்களால் முடிந்த பணத்தை போடுமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் வைப்பேன்.


இவ்வாறாக சேர்த்த ஒவ்வொரு ரூபாய்க்கும் என்னிடம் கணக்கு உள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் அன்னா ஹசாரே கூறியுள்ளார். (இ-5)

## பவானிசிங் நியமனத்தில் தொடர்பில்லை உச்ச நீதிமன்றில் கர்நாடக அரசு விளக்கம்

'ஜெயலலிதாவின் சொத்து குவிப்பு மேன்முறையீடு வழக்கில் அரசு சட்டத்தரணியாக பவானிசிங் நியமிக்கப்பட்டதில் தொடர்பில்லை' என்று கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து, ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் சார்பில் தொடரப்பட்ட மேனமுறையீட்டு மனு கர்நாடக உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சிறப்பு அரசு சட்டத்தரணியாகவுள்ள பவானி சிங்கை நீக்க வேண்டும், அரசு தரப்புக்கு உதவ அனுமதி அளிக்க வேண்டும், அதுவரை மேன் முறையீட்டு வழக்குக்கு இடைக் கால தடை விதிக்க வேண்டும் என்று கேட்டு தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் சாரபில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.



இம்மனு, நீதிபதிகள் மதன் லோக்கூர், ஆர்.பானுமதி அடங்கிய அமர்வு முன்பு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அன்பழகன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அந்தி யர்ஜுனா ஆஜராகி, விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் ஆஜராகும் ஒரு சட்டத்தரணி அதன் மேன்முறையீட்டு வழக்கில் ஆஜராக முடியாது.

மேன்முறையீட்டு வழக்கில் பவானி சிங்கின் வாதங்கள் அனைத்தும் குற்றவாளிக்கு ஆதரவாக வுள்ளது. குற்றவாளிகள் தரப்பில் தண்டனையை இரத்து செய்யக் கோரி மனு செய்தபோதும், பிணை கோரிய போதும் பவானி சிங் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.


எனவே, அவரை வழக்கில் இருந்து நீக்கி உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

ஜெயலலிதா சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி பாலி எஸ்.நரிமன், மேன்முறையீட்டு வழக்கில் அரசு சட்டத்தரணியை நியமிக்க கர்நாடக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால், அரசு தரப்பு விசாரணை அமைப்பான இலஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் பவானி சிங் நியமிக்கப்பட்டு வழக்கை நடத்தி வருகிறார். இதில் எந்த தவறும் இல்லை' என்று வாதிட்டார்.

கர்நாடக அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம்.என்.ராவ், ஜெயலலிதா மேன்முறையீட்டு வழக்கில் கர்நாடக அரசை பிரதி வாதியாக சேர்க்கவில்லை. எனவே, பவானி சிங் நியமனத்துக்கும் கர்நாடக அரசுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று வாதிட்டார்.

இதையடுத்து, வழக்கின் அடுத்த விசாரணையை ஏப்ரல் முதலாம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். மேன்முறையீட்டு வழக்குக்கு தடை விதிக்க கோரிய வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்கனவே நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஜஆர்என்எஸ்எஸ் 1டி இன்று விண்ணில்



ஜஆர்எனஎஸ்எஸ் 1டி செயற்கைக் கோள் இன்று விண்ணில் செலுத்தப்படுகிறது. ஜிபிஎஸ் என அழைக்கப்படும் புவி இருப்பிட அமைப்பிற்காக ஜஆர்எனஎஸ்எஸ் திட்டத்தை இஸ்ரோ செயற்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 7 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டன.

இதுவரை மூன்று செயற்கைக் கோள்கள் வெற்றிகரமாக செலுத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக நான்காவது செயற்கைக் கோளான ஜஆர்என்எஸ்எஸ் 1டி, ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் ஏவுதளத்திலிருந்து பிஎஸ்எல்விசி 27 ரொக்கெட் மூலம், இன்று மாலை 5. 19 மணியளவில் விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

இதற்காக நேற்றுமுன்தினம் தொடங்கிய ஐம்பத்து ஒன்பதரை மணி நேர கவுண்டவுன் சீராக நடைபெற்று வருகிறது என இந்திய விணவெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ தெரிவித்துள்ளது. செயற்கைக் கோளை செலுத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயாராகவுள்ளதாகவும் இஸ்ரோ கூறியுள்ளது. (இ-5)

பாரதச் செய்தி

## செய்தித் தொடர்பாளராக எழுத்தாளர் நியமனம்



வெளியுறவுத் துறையின் மூத்த அதிகாரியும், ஒஸ்கார் விருது பெற்ற ஸ்லம்டாக் மில்லினியர்ஸ் திரைப் படத்தின் மூல நாவலை எழுதியவருமான விகாஸ் ஸ்வரூப், அந்தத துறையின் புதிய செய்தித் தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1986 ஆம் ஆண்டின் வெளியுறவுப் பணி (ஐ.எஃப்.எஸ்) அதிகாரியான ஸ்வரூப், தற்போது வெளியுறவுத் துறையின் ஐ.நா.சபை - அரசியல் பிரிவின் இணைச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

தற்போது, செய்தித் தொடர்பாளராகப் பதவி வகித்து வரும் சையத் அக்பருதீன், வெளியுறவுத் துறையின் கூடுதல் செயலாளராகவும், வரும் ஒக்டோபரில் நடைபெறவுள்ள இந்திய - ஆபிரிக்க மாநாட்டின தலைமை ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டதை அடுத்து, புதிய செய்தித் தொடர்பாளராக ஸ்வரூப் நியமிக்கப்பட்டுள்ளார். அவர், ஏப்ரல் 18 ஆம் திகதி புதிய பொறுப்பை ஏற்கவுள்ளார்.

விகாஸ் ஸ்வரூப் எழுதிய க்யூ அண்ட் ஏ என்ற ஆங்கில நாவலைத் தழுவியே ஸ்லம்டாக் மில்லினியர்ஸ் திரைப்படம் எடுக்கப்பட்டது.

அதற்கு, கடந்த 2009 ஆம் ஆணடின் சிறந்த படம், சிறந்த இய க்குநர், சிறந்த திரைக்கதைத் தழுவல் உட்பட 8 ஒஸ்கார் விருதுகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பீஹாருக்கு நிதியுதவி கோரி மோடியைச் சந்தித்தார் நிதிஷ்

பீஹாருக்கு நிதி உதவி கோரி பிரதமர் நரேந்திர மோடியை பீஹார முதல்வர் நிதிஷ்குமார் நேற்றுமுன் தினம் டில்லியில் சந்தித்துப் பேசினார்.

பா.ஜ.க. ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி முறிந்த பிறகு மோடியை அவர் இப்போதுதான் முதல்முறையாக சந்திக்கிறார்.

14 ஆவது நிதிக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் பீஹாருக்கு ரூ.50 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படும். எனவே அதனை ஈடு செய்ய வேண்டுமென்று மோடியிடம் நிதிஷ் கோரிக்கை வைத்துள்ளார்.

17 ஆண்டுகளாக நீடித்து வந்த பா.ஜ.க. ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி கடந்த மக்களவைத் தேர்தலில் மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட போது உடைந்தது. மோடியை பிரதமர் வேட்பாளராக ஏற்க முடியாது என்று கூறி கூட்டணியில் இருந்து நிதிஷ் விலகினார். அப்போது இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மோடி, நான்கு சுவருக்குள் தன்னிடம் சகஜமாக பேசும் நிதிஷ், அரசியல் ஆதாயத்துக்காக தன்னை எதிர்ப்பதாக கூறி யிருந்தார்.


இதன் பிறகு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்று மத்தியில் ஆட்சியைப் பிடித்தது. பீஹாரில் ஐக்கிய ஜனதா தளம் தோல்விக்கு பொறுப்பேற்று நிதிஷ் குமார் முதல்வர் பதவியில் இருந்து விலகினார். இப்போது அங்கு ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் அவர் மீண்டும் முதல்வராகியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் டில்லி வந்த நிதிஷ் குமார், மோடியை சந்தித்துப் பேசினார். அப்போது நிதிக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவதால் பீஹாருக்கு ஏற்படும் இழப்புகளை எடுத்துக் கூறி மாநிலத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்குமாறு மோடியிடம் கேட்டுக் கொண்டார். பிறகு செய்தியாளர்களிடம் பேசிய நிதிஷ், நிதிக்குழுவால் இப்போது பீஹாருக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. அதை ஈடு செய்யுமாறு கேட்டுக் கொண்டேன் என்றார்.

இது மரியாதை நிமிர்த்தமான சந்திப்பு என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. முன்னதாக பீஹாரில் நிதிஷ் நடத்திய அனைத்துக் கட்சி கூட்டத்தை பா.ஜ.க. புறக்கணித்தது. பீஹாருக்கு நிதி உதவி கேட்டு நேரடியாக பிரதமரிடம் கடிதம் எழுத இருப்பதாக பீஹார் மாநில பா.ஜ.கவினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய ஓபன் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன்; அரையிறுதிக்கு முன்னேறினார் சாய்னா



இந்திய ஓபன் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் போட்டி புதுடில்லியில் உள்ள ஸ்ரீ போர்ட் ஸ்போர்ட்ஸ் காம்ப்ளக்சில் நடைபெற்று வருகிறது.


நேற்றைய தினம் பெண்கள் ஒற்றையருக்கான காலிறுதிப்போட்டிகள் நடைபெற்றன. இதன் ஒரு போட்டியில் இந்தியாவின் முன்னணி வீராங்கனை சாய்னா நேவால் இந்தோனேசியாவின் ஹனா ரமாதினியை எதிர்கொண்டார்.

தொடக்கம் முதலே சிறப்பாக விளையாடிய சாய்னா 21-15, 21-12 என நேர் செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். இந்திய ஓபன் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் போட்டியில் சாய்னா அரையிறுதிக்கு முன்னேறுவது இது முதல் முறையாகும். அரையிறுதி போட்டியில் வெற்றி பெற்றால் உலக பெண்கள் பட்மிண்டன் தர வரிசையில் முதல் இடம்பிடிப்பார். அதேசமயம், ஆண்கள பிரிவில் எச்.எஸ். பிரனோய், ஆர்.எம். வி.குரு சாய்தத் ஆகியோர் காலிறுதியில் போராடி தோல்வியடைந்தனர். (க)

# மியாமி ஓபன் டென்னிஸ்; ஷரபோவா வெளியேற்றம்

அமெரிக்காவில் உள்ள மியாமி நகரில் மியாமி ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் ஐந்து முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ரஷ்யாவின் மரியா ஷரபோவா 97-ம் தரநிலை வீராங்கனையிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.



மகளிர் ஒற்றையர் 2ஆம் சுற்று ஆட்டத்தில் மரியா ஷரபோவா தனது சக நாட்டைச் சேர்ந்த டேரியா கவ்ரிலோவாவை எதிர்கொண்டார். டென்னிஸ் உலகத் தரவரிசையில் கவ்ரிலோவா 97-ம் இடத்தில் உள்ளார்.

இதனால் ஷரபோவா எளிதில் வெற்றி பெறுவார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஷரபோவா 6-7(4), 3-6 என நேர்செட்டில் அதிர்ச்சிகரமாக தோல்வியடைந்தார்.

கடந்த 2003-ம் ஆண்டு தனது முதல் மியாமி தொடரில் முதல் சுற்றிலேயே ஷரபோவா வெளியேறினார். முன்னணி வீராங்கனை என்பதால் இந்த ஆண்டு முதல் சுற்றில் பை.ஓர்டர் பெற்று நேரடியாக இரண்டாம் சுற்றில் விளையாடினார். ஆனால், அவர் களமிறங்கிய முதல் ஆட்டத்திலேயே தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

வெற்றி பெறுவேன் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், இந்த தோல்வி நிச்சயமாக ஆச்சரியத்தை அளிக்கிறது என்று ஷரபோவா கூறினார்.

மியாமி ஓபனில் 5 முறை இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய ஷரபோவா ஒருமுறை கூட பட்டத்தை வென்றதில்லை. (க)

# ஹோலி இரவில் விளையாடினால் பகலில் எப்படி விளையாட முடியும்

## பாலிவுட் நடிகரின் கருத்தால் சர்ச்சை



இந்திய அணியின் தோல்வி குறித்து பாலிவுட் நடிகர் கமல்ரசித் கான் டுவிட்டர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள கருத்து சர்ச்சையை கிளப்பியுள்ளது.

உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதியில் இந்தியா 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

முன்னதாக இந்திய அணியின் துணை அணித் தலைவர் ஹோலி ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்ததால் ரசிகர்கள் கொந்தளித்தனர். மேலும் அவரின் காதலி அனுஷ்கா ஷர்மா சிட்னி சென்றதால்தான் அவர் சொதப்பினர் என்றும் குற்றம் சாட்டினர்.

இந்நிலையில், பாலிவுட் நடிகர் கமல்ரசித் கான் உலகக் கிண்ண அரையிறுதியில் இந்தியா தோற்றதற்கு அனுஷ்காதான் காரணம் என்றும், அவர் வீடு மீது கல்லெறியுங்கள் எனவும் ரசிகர்களை துண்டிவிடும் விதத்தில் டுவிட்டரில் எழுதியுள்ளார்.

மேலும் சிட்னி மைதானத்தில் விராட் ஹோலி நன்றாக விளையாடுவார் என மக்கள் நம்பினர். ஆனால் இரவில் விளையாடிய அவரால் பகலில் எப்படி விளையாட முடியும்? என்று பகிரங்கமாக கருத்து வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

இவர், பப்ளிசிட்டி தேடும் விதமாக இதற்கு முன்னும் இதுபோல் பல முன்னணி நட்சத்திரங்கள் மற்றும் பிரபலங்களை கிண்டலடித்து பல சர்ச்சை கருத்துக்களை கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் இலங்கையைச் சேர்ந்த தர்மசேன



அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை மெல்மேர்ன் மைதானத்தில் போட்டிகளை நடத்தும் அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்த போட்டியில் கள நடுவர்களில் ஒருவராக இலங்கையைச் சேர்ந்த தர்மசேன பணியாற்றுவார் என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. இதனால், தர்மசேன முதன்முறையாக உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் நடுவராக பணி செய்ய இருக்கிறார். இவருடன் இங்கிலாந்தைச் சேர்ந்த ரிச்சர்ட் கெட்டில்பாரோ நடுவராக பணி செய்ய இருக்கிறார்.

தர்மசேன கடந்த 2011-ம் ஆண்டிற்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த நடுவர் பட்டத்தை வென்றவர். 23 ஆண்டுகளாக உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் இடம்பெற்றிருந்த ஆசிய அணி இந்த தடவை இந்த சாதனையை தவறவிட்டது. இறுதிப்போட்டியில் தர்மசேன நடுவராக பணியாற்றுவதன் மூலம் அந்த வாய்ப்பில் நீடிப்பதாக நினைத்து ஆறுதல் அடைந்து கொள்ளலாம். (க)

## உலகக் கிண்ணத்தில் ஆஸியின் சாதனைகள்

உலகக்கிண்ண அரங்கில் இதுவரை 6 முறை அரையிறுதிப் போட்டியில் விளையாடிய அவுஸ்திரேலிய அணி தோல்வியை சந்திக்கவில்லை.

நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதியில் அவுஸ்திரேலியா 328 ஓட்டங்கள் சேர்த்தது. உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியில் 300 ஓட்டங்களை கடந்த முதல் அணி அவுஸ்திரேலியாதான். இதற்கு முன்பு இதே உலகக் கிண்ணத்தில் ஆக்லாந்தில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான அரையிறுதியில் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்கு 299 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

அவுஸ்திரேலியா இந்த ஆட்டத்தில் 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதே, உலகக்கிண்ண அரையிறுதியில் ஒரு அணியின் சிறந்த வெற்றியாகும். இதற்கு முன்பு 2003-ம் ஆண்டு உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி கென்யாவை 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து இருந்தது. இந்த உலகக்கிண்ணத் தொடரில் இந்திய வீரர் ஷிகர் தவான் 412 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். உலகக்கிண்ணத்தில் 400 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த 4வது இந்தியர் தவான் ஆவார். (க)

# மரண அறிவித்தல்



## திருமதி அம்பிகையம்மா தியாகராசா (கண்ணகி)

கொக்குவில் கிழக்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகையம்மா தியாகராசா (கண்ணகி) நேற்று (27.03.2015) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி -அமிர்தம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தில்லைவனம் (நயினாதீவு 5-ம் வட்டாரம்) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி தியாகராசாவின் அன்பு மனைவியும், சத்தியசீலன் (பிரான்ஸ்), ஜெகசீலன் (உரிமையாளர் - ஜெகன் பாமசி, கிறீன் கிறாஸ் ஹோட்டல் - யாழ்ப்பாணம்), குகசீலன் (பிரான்ஸ்), திருச்செல்வி (அஜந்தி - பிரான்ஸ்), சசிகலா (ராஜா கிறீம் கவுஸ் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-497)

தகவல்:-குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு :- 021 221 2343

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான போசாக்குப் பொதிகளை வழங்கும் நிகழ்வு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது...

## ரணில் - விக்கி நிழல்...

வழங்கப்படாத நிலையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தனர்.

சமகாலத்தில் பிரதமருக்கும் வடமாகாண முதலமைச்சருக்கும் இடையில் நிழல் யுத்தம் ஒன்று நடைபெற்று வருகின்றது.

இந்த நிழல் யுத்தம் கடந்த வாரம் யாழ்.வளலாய் பகுதியில் இடம்பெற்ற காணிகள் கையளிப்பு நிகழ்வில் வெளிப்பட்டது. இந்நிலையில் நேற்று முன் தினம் கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வட மாகாண முதலமைச்சரை சந்திக்கப்போவதில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்களையே சந்திப்பேன் எனவும் தெரிவித்திருந்தார். இந்நிலையில் நேற்றைய நிகழ்வுகளுக்கு முதலமைச்சருக்கு அழைப்பிதழ்களும் அனுப்பி வைக்கப்படவில்லை.

இதேவேளை நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடமாகாணசபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பிரதமரின் யாழ். நிகழ்வுகளை நாங்கள் புறக்கணிப்போம் எனத் தெரிவித்திருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு நிகழ்வுகளினை வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட சபை உறுப்பினர்கள் மற்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்திருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரணிலின் பல நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் குறித்த உறுப்பினர்கள் கர்ப்பிணித் தாய்மார்களிற்கு போசாக்கு பொதிகளினையும் வழங்கி வைத்ததுடன் ரணிலுடன் சேர்ந்தும் வழங்கி வைத்தனர். இதே போன்று யாழ்.மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகிய மூவருமே ரணிலின் நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் , பிரதமர் ரணிலின் நிகழ்வுகளில் கலந்து கொள்ளாதது வருத்தமளிக்கிறது என பிரதியமைச்சர் விஜயகலா தெரிவித்துள்ளார். (11)

## யாழ்ப்பாணம் மாற்ற...

காப்பு வலயமாகவுள்ள பொதுமக்களின் காணிகளை இராணுவம் பொருளாதார ரீதியில் பயன்படுத்தி வருவதாக கூறப்படுவது தொடர்பில் நேரில் சென்று ஆராய்வுள்ளேன் என்றார்.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியதாவது,

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் காணிகளை இராணுவத்தினர் பொருளாதார வலயமாக பயன்படுத்துகின்றனர்.

வலிகாமம் வடக்கிலுள்ள 1,100 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டு அதில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், குறித்த ஒரு பிரிவில் மாத்திரம் மீளகுடியமர மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்களை முழுமையாக மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பலாலி, மயிலிட்டி பகுதி மீனவர்களின் மீள்குடியேற்றமும் மேற்கொள்ளப்பட வேண்டும். இராணுவத்திடம் கோரினால் ஒரு கிலோ. மீற்றர், 2 கிலோமீற்றர் தூரம் பாதுகாப்பு வேலியை பின்நகர்த்து கின்றோம் என்று கூறுகின்றனர்.

எமக்கு இராணுவத் தீர்வு தேவையில்லை. அரசியல் தீர்வுதான் தேவை. இராணுவம் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விடுதி, பண்ணை நடத்துவதுடன் விவசாயம் செய்கின்றனர். உயர்பாதுகாப்பு வலயம் என்பது பொருளாதார வலயமாக பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மக்களுக்குரிய காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கையில் இரகசிய முகாம் இல்லை என்று கூறப்படுகின்றது. இந்த இரகசிய முகாம்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதன்மூலம் கடத்தப்பட்டோர், காணாமற்போனோர் தொடர்பில் பல விடயங்கள் வெளிப்படும் என்று சுரேஸ் எம்.பி கூறினார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உயர்பாதுகாப்பு வலயத்தை பொருளாதார வலயமாக பயன்படுத்தப்படுவது தொடர்பாக இன்று சனிக் கிழமை இராணுவ அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது கதைப்பேன்.

இலங்கையில் இரகசிய முகாம்கள் இல்லை. அவ்வாறு இருப்பதாக நான் அறியவில்லை. இது தொடர்பாக நாம் தொடர்ந் தும் கலந்துரையாட வேண்டும் என்றார்.

இலங்கைப் பிரச்சினையை தீர்ப்பதற்கான தென்னாபிரிக்க குழு செயற்படுகின்றது. அந்தக்குழுவின் நடவடிக்கைகள் மூலம் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வை முன்னெடுத்துச் செல்லலாம்.

காரணமின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண்கள் தொடர்பில் நாம் வழக்கு தாக்கல் செய்யவுள்ளோம் என்றார். (11)

## முதல்வரை புறக்கணித்த...

உலகமெலாம் வாழும் புலம்பெயர் மக்களினதும் ஏகோபித்த வரவேற்பையும் மதிப்பையும் பெற்ற கடந்த வடமாகாண சபை தேர்தலில் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் விருப்புவாக்குகளையும் பெற்ற வடக்கு மாகாண முதலமைச்சரை புறக்கணித்து வடக்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்வுகளை நடத்துவதானது ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் இன சகிப்புத் தன்மை நல்லிணக்கத்துக்கும் மக்கள் ஆணைக்கும் வைக்கப்பட்ட வேட்டாகும்.

இதேவேளை ரணிலின் நேற்றைய நிகழ்வுகளில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, ஊடகப்பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஈ.பி.டி.பியின் எம்.பிக்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் மு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (4)

## மைத்திரி ஆட்சி...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பல காலமாக தான் அறிந்த ஒருவர் எனவும் அவர் மனசாட்சிக்கு உண்மையாக நடந்து கொள்வதோடு சட்டத்திற்கு விரோதமான காரியங்களை மேற்கொள்ளாத ஒருவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலங்களில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை தற்போது நிறைவேற்றிக் கொண்டிருப்பதனால் வடக்கு கிழக்கு மக்கள் அவர் மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (11)

## இன்னும் 20...

போதைய ஆட்சி நாட்டில் நீடிக்க வேண்டும். இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படும் முறையினை நாட்டில் ஸ்தாபித்தால் எதிர்காலங்களில் யார் வந்தாலும் இவ் முறையினை மாற்ற முடியாது.

மேலும் இவ்வாறான ஆட்சியை தொடர்ந்து கொண்டு செல்வதற்கு மக்களின் ஆதரவு எங்களுக்கு மிகவும் அவசியம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (11)

## ரணிலுக்கு...

ருந்தார்.

இவ்வாறு ரணில் கலந்து கொள்ள செல்லும் இடங்களிலுள்ள வீதிகளில் நூறு மீற்றருக்கு ஒரு பொலிஸார் என நிறுத்தப்பட்டிருந்தனர்.

இதனை விட ரணிலின் நிகழ்வுகளுக்கு விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

ரணில் சென்ற பிரதான வீதிகளின் இடையிடையே மறிக்கப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தன.

ரணிலின் நிகழ்வுகள் நேற்று இரவு நடைபெற்றதால் மானிப்பாய் வீதி, கே.கே.எஸ்.வீதி ஆகியவற்றில் பொலிஸார் குவிக்கப்படிருந்தனர்.

இதேவேளை இன்றையதினம் இப்பாதுகாப்பு கெடுபிடிகள் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (4)


WIN 5000/=

WORLD CUP 2015

ICC CRICKET WORLD CUP 2015

icc cricket world cup 2015

BIT, CIMA, MCSE ஆகிய பாடநெறிகளை பயில்வதற்கான 5000/= ரூபா புலமைப்பரிசிலுக்கான வினா? எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 29ம் திகதி நடைபெறும் உலகக்கோப்பை கிரிக்கெட்போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

A. Newzealand B. Australia

Type wc29 <Name> <ans> <District> <DOB> & sent to 0772395895 (C-493)

Annamalai University
Distance Education Unit

WITH COURAGE AND FAITH

ஆதவன் மண்டபம் ஆவரங்கால்

பின்வரும் பாடங்களுக்கான பட்டப்படிப்பு, முதுமாணி, வைத்தியகலாநிதி, இசைத்துறை, கலை, வர்த்தகம், தகவல்தொழில்நுட்பம். மேற்படி கல்வி நடவடிக்கைகளுக்கான **நிர்வாக உத்தியோகத்தர் தேவை.**
(A/L சித்தி தகைமையுடைய பெண்கள்) (9917)

T.P :- 077 694 4543, 077 137 2259

GRADE - 10
2015 New Syllabus
PHYSICS
QUESTIONS & MARK SCHEMES

புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். அனைத்து விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், ENGLISH MEDIUM GRADE - 10, G.C.E O/L மாணவர்களுக்கும் மிகவும் பயனுள்ள வெளியீடு. (9910)

ஆக்கம் :- J.J.MICHAEL
தொடர்பு :- 077 955 4276

Coming soon Biology, Chemistry Q & M

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
கனடா
Express Entry Visa

தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை

University Lecturers, Instructors, Vocational Trainers, Teachers, Librarians முதல் Sports Managers, Referees, Coaches, Athletes வரை

150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு 180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் புள்ளி அடிப்படையில் உங்கள் விண்ணப்ப தகைமையை மதிப்பீடு செய்து, கனேடிய முகவர் ஊடாக நேரடியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் 100% பாதுகாப்பான ஏற்பாடு

ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
FREE Assessment
www.sikaram.lk

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Sikaram (Pvt) Ltd.
No.21 ... வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம்) Tel: ... 798, 021 222 00 11 (C-496)

PERSONAL CLASS
ACCOUNTING
A/L 2015, 2016, 2017
புதிய பிரிவுகள் ஆரம்பம்
இடம் :- ஆறுமுகம் லேன்,
கல்வியங்காடு.
BY :- A.KALAICHELVAN
T.P :- 077 694 4543 (9917)

திருமணம்முடித்து UK செல்பவர்களுக்கான KET english exam இற்கு தயார் படுத்தும் வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் City & Guilds English பரீட்சைகள் யாவும் UK Border Agency (London தூதரகம்) இனால் இடைநிறுத்தப்படுகின்ற காரணத்தினால் KET English Exam செய்வதன் மூலம் London செல்லமுடியும்.
(மிகவும் இலகுவான ஆங்கிலப்பரீட்சை என்பது குறிப்பிடத்தக்கது)

புதிய பிரிவுகள் அரம்பம் : 31-03-2015 10am, 01-04-2015 3pm

WEC- விசா ஆலோசனை மையம்
0779265447, 0217200989
சாவகச்சேரி (இந்துக்கல்லூரிக்கு அருகே) (C-472)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.